بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பததிராதிபா—கூ அ அபதுல மஜீத

வாலயூம 4	1927ஹு செபடெமபாமீ	பகுதி 9

கவாரிகுல ஆதாதது

நபிமாாகளின முஅஜிஸாககள உணமையானவைகளே

மானிடப பிரிவுகளில அலலாஹுத ஆலா உணடு மெனபதன பேரில ஈமான கொணடிருபபவாகள். உலகததை ஆககியோன உணடெனபதன மீது உறுதி கொளளுவாாகள ரபபுல இஸஸத உலக சிருஷடி யாவறறையும படைபபவன எனறு அறிநதிருபபோாகள ஆகிய அததுணைககூடடஙகளும பிரிவினாகளும சமூகஙகளும அநத அலலாஹவுகது இலமு—அறியுதல குதரத—சகதி இராதாஹ—நாடடம முதலியவைகள உணடு மெனபதன மீதும நமபிககை வைததிருககினறனா ஆதமுடைய மககடகளில எககூடடம அலலாஹ உணடெனபதை யுறுதிககொண டிருபபதோடு அவனின ஸிபத-வாணிபபு இலமு குதரத போனறவைகளை யொபபுக கொளளவிலலையோ அவ வகுபபினருககு அறிவிதது விடுஙகள —

ஹுகமாவு யெனற பெயரோடு கியாதியுறறவாகள மடைமையும மூளையுமறற சொறகளை யாதொரு உதாஹரணஙகளனறியே

ஒப்புக்கொள்ளுகிறார்கள். அல்லாஹ் உண்டாயிருப்பதில் எப்புத்தியுடைய பகைவனுக்கும் தர்க்க மிருந்தால் இருக்கலாம். ஆனால், உலக சிருஷ்டி கர்த்தா யுண்டென்பதை யுறுதிக்கொண்டதன் பின்பு, அவனின் ஸிபாத் முதலியவைகளை யொப்புக் கொள்ளுவதைத் தவிர, வேறு வழி கிடையாது என்பதே.

மானிட அறிவு தன் சக்தியினால் அல்லாஹுத ஆலாவின் ஸிபத்துகளை நன்கறிந்து கொள்ளமுடியா தென்பது வேறு விஷயமாகும். சமாஜி சகோதரர்கள் "ஈசுவர பகவானை சர்வ சக்திமானாகவும், அதிபெரும் தத்துவ முடையவனாகவும் உறுதி கொள்ளுகிறதோடும் கடவுளுடைய சம்மத மின்றி யவர் உலகத்தைச் சிருடிஷ்க்கமுடியா" தென்று சொல்லுவதைப் போல், தன் அறிவின் சக்திக்கு எற்றிய மட்டும் பரிசுத்த அல்லாஹுத ஆலாவின் ஸிபத்தை அறிபினும் அறிந்துக் கொள்ளட்டும். நாம் அதைப்பற்றி தர்க்கம் செய்ய நாடவில்லை. நாளதுவரையில் எத்துணைக் கூட்டங்கள் கடவுள் உண்டென்பதை ஆமோதித்திருக் கின்றனவோ, அன்னோர் யாவரும் அல்லாஹுத ஆலாவின் தாத், ஸிபாத், இல்மு, குத்ரத் ஆகியவைகளை யொப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யறிவிக்க வேண்டு மென்பதே நம் நோக்கமாகும். காரிருள் சூழ்ந்த இரவில் செயற்கை விளக்கு போன்றவைகளின் பிரகாசமின்றி கண்ணுடையோன் தட்டுக்கெட்டுத் தடுமாறுவதுபோல், உலகை தூர்க்கிருத்தியமென்ற இருள் சூழ்ந்த போது நுபுவ்வத்தின் தீபமின்றி அல்லாஹுத ஆலாவின் ஸிபத்துகளை மதிப்பிட மானிட அறிவு தடுமாற்றமடையும். ஏனெனில், நற்பார்வையுடைய கண் இரவில் தற்காலிகமான ஒளிவன்றி வேலை செய்யக் கூடாததாக, தற்காலிகமான வெளிச்சத்தையே தேடுகிறது. அஃதேபோல் புத்தியின் கண்களும் தற்காலிக பிரகாசத்தையே கோருகிறது. அஃதன்றியே அதன் வேலை நடை பெறாது.

பரிசுத்த வர்ணிப்புடைய இறைவனின் கண்ணியத்தை நோட்டமிடுங்கள். அர்ஹ முர்ராஹிமீனின் கிருபையை ஆராய்ச்சி செய்யுங்கள். அல்லாஹுதஆலா தன் பூர்ண சக்தியினால் ஜடலோகத்தின் பரிபாலனத்திற்கு எப்படிப்பட்ட யொழுங்கு முறைகளை யேற்படுத்தியிருக்கிறான்! அஃதாவது:—இருள் சூழ்ந்த இரவில் இச்சரீர கண்களுக்கு உதவிபுரியும்படி வானத்தில் ஜ்வலிக்கும் நட்சத்திரங்களையும், சந்திரனென்ற தீபத்தையும் அமைத்திருக்கின்றான். இரவு பொதுவாய் சுகம்பெறும் காலமாகும். அதில் முக்கிய காரியம் செய்யும்படி நேரிடில், வேலை செய்வோர்கள் சொற்பமானவர்களே. ஆகையால், அவர்களின் தேள்வைக்கேற்றவாறு சொற்பமான பிர

காசத்தை யுண்டாக்கியிருக்கிருன். இருள் சூழ்ந்த அறையில் வேலை செய்யும்படி நேர்ந்தால், இப்பூதக்கண்ணின் உதவிக்காக விளக்கு, தீபம் போன்றவைகளை யுண்டாக்கிக் கொள்ளுவதற்கான யோசனையின் சக்தியை மாந்தர்களின் மூளைக்கு அளித்திருக்கிருன். பகலோ பொதுவாய் வேலைச்செய்யும் காலமாகும். அல்லாஹுத ஆலாவின் சிருஷ்டிகள் அநேகமாய் யாவும் வேலை செய்கின்றன. ஆகவே, அப்பகலில் எவ்வஸ்துவையும் துலாம்பரமாய் தெரியும்படி செய்யக்கூடிய அதிபெரும் ஒளிவாகிய சூரியனை உண்டாக்கியிருக்கிருன். வெள்ளையெழுத்துடையோனும் அதன் பிரகாசத்திஞல் பிரயோசன மடைகிருன். ஜடலலோகத்தின் பூதக்கண்ணின் பார்வையால் ஆகவேண்டிய காரியங்கள் யாவும் அச்சூரியனுடைய பிரகாசத்திஞல் ஒழுங்கு பெற முடிகிறது.

அல்லாஹுதஆலா ஆத்ம லோகத்தின் ஆத்ம கண் (அகக்கண்ணுக்கு) உதவியளிக்கக் கூடிய தீபத்தையுண்டாக்கா திருப்பான் என்று நினைக்கமுடியாது. அஃதாவது:—ஜடலலோக பூதக்கண்ணின் உதவிக்காக வானத்தில் பலவிதமான தீபத்தை யுண்டாக்கியிருப்பது போல், அவனின் சிருஷ்டிகள் தங்கள் ஆத்மாவின் தேள்வைக்காக ஷைத்தானிய்ய (துர் யெண்ண) த்தில் சுழுண்டுத்திரியாமல் இருப்பதற்காக ஆத்ம தீபத்தை யுண்டாக்கியிருக்கிருன். மானிட ரூபத்தில் நபித்துவத்துடன் வந்தோர்களே அத்தீபமாகும். அவர்களில் இறுதியாக பரிசுத்த தாத்தையுடைய ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நபித்வத்தின் தீபத்திஞல் ஆத்மாக்களையும், ஆத்மலோகத்தையும் ஜ்வலிக்கச் செய்துவிட்டார்கள். சூரியன் அஸ்தமித்து, இருள் சூழ்ந்த இரவின் வெளிச்சத்திற்காக சந்திரன் போன்றவைகளைப் படைத்திருப்பதுபோல், நபித்துவத்தின்பொழுது அஸ்தமித்து, உலகில் ஷைத்தானிய்யத், நப்ஸானிய்யத் ஆகியவைகளின் இருள் சூழ்வதைத் தடுக்கும் பொருட்டு "உலமாயெ உம்மத்" என்ற தீபங்களை யுண்டாக்கி, அவ்விருளை நீக்கி, பிறகாசிக்கச் செய்கிருன்.

சூரியன், சந்திரன், நட்சத்திரம் ஆகியவைகள் தங்களின் நடவடிக்கையில் உதாஹரணமற்றதும், சிருஷ்டிகளைக் காட்டினும் உன்னதமானவைகள். அதைமாந்தர்கள் நோக்கியதும் யாதொரு தாமதமன்றி இவைகள் அல்லாஹுத ஆலாவால் சிருஷ்டிக்கப் பட்டவைகள் என மொழியும்படி செய்யக்கூடிய சக்தியையுடையது. அஃதேபோல் ஆத்மலோகத்து இருளைப் போக்குவதற்காக "நுபுவ்வத்து" என்ற

தீபத்தை சுமந்துவந்த நபிமார்களும், ரஸூல் மார்களுமாவார்கள். சிருஷ்டிகள் யாவும் ஒன்று பட்டு செய்வதற்கியலாத காரியங்களை உதாஹரணமாக அன்னோர்கள் அல்லாஹுதஆலாவின்சந்நிதானத்திலிருந்து பெற்று வந்திருக்கின்றார்கள். ஹிருதயத்தின் ஒளியும், அகக்கண்ணும் அவைகளைப் பார்த்த மாத்திரத்தில் யாதொரு தடங்கலன்றி "இன்ன ஹாதா ரஸூலுன்கரீம்" மெய்யாக இவர்கள் சங்கை வாய்ந்த திருத்தூதர்களாகும், என மொழியச் செய்யும் மின்சார சக்தியை அவைகள் பெற்றிருந்தன. மாந்தர்கள் ஒன்றுகூடி செய்விக்க முடியாத சூரியன், சந்திரன் போலவே அல்லாஹுதஆலாவால் அனுப்பப்பட்ட நபிமார்களும் அவர்களல்லாதவர்கள் ஒன்றுபட்டு செய்வதற்கு இயலாத அநேக நற்காரியங்களைச் செய்திருக்கின்றனர். இருள் சூழ்ந்த காலத்தில் பூதக்கண் வேலைசெய்வதற்குத் தற்காலிகமான பிரகாசத்தைத் தேடுவதுபோல், அல்லாஹுதஆலாவின் ஸிபத், இல்மு, குத்ரத் போன்றவைகளை யொப்புக்கொண்டிருப்பதோடு, அவைகளை யுள்ளா உள்ளபடி அறிவதற்கு மானிட அறிவு ஆத்ம தீபத்தை எதிர்ப்பார்க்கிறதென்பதே எம்முடைய எல்லா வியாசங்களிலும், பிரசங்கங்களிலும் பொதிந்திருக்கின்றன.

நேயர்களே! சற்று கவனத்தோடு கேளுங்கள் "பிணம் உயிர் பெற்று எழுந்திருப்பது, துளிர்விட்டெரியும் அக்னி கரிக்காமலிருப்பது, பொடிகற்களும், பாறைகளும் பேசுவது, ஒட்டகம் சாஷ்டாங்கஞ்செய்வது, விருக்ஷம் சாட்சிப்பகறுவது, சாதாரணமான பாறையிலிருந்து ஊற்று உண்டாகிறது, விரல்களில் நின்றும் ஜலத்தின் ஆறு வெளியாகிறது, இன்னம் சந்திரன் இருபிளவுபட்டுப் போகிறது போன்ற மாந்தர்கள் ஒன்றுபட்டும், தனித்தும் செய்வதற்கியலாததும், பொதுஜன வழமைக்கு விரோதமானதுமாகிய அநேக காரியங்களை அல்லாஹுதஆலாவின் உண்மை அடியார்களான நபிமார்களும், ரசூல்மார்களும் செய்து காட்டினர். அக்காரியங்களை அன்னோர்கள் தங்கள் இஷ்டப்படி செய்விக்கும் சக்தியவர்களுக்கில்லை. உண்மையில் அவைகள் யாவற்றையும் செய்வித்தவன் உலக சிருஷ்டி கர்த்தாவாகும். அவனே ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வோர் குணத்தை சொந்தமாக்கி வைத்திருக்கிறான். திரியும் மிஷினுடைய குணம் திரிவது. கடிக்கும் மிஷினுடைய குணம் கடிப்பது. ஆனால், அம் மிஷினை யோட்டுபவன் (றைவர்) அதை நிறுத்திவிட்டால், அதன் குணம் வெளியாக மாட்டாது என்பதை எவர்தான் அறியமாட்டார்! அக்காரியத்தைப் பார்த்து எவரும் புதுமைப்படமாட்டார்கள். ஆனால், காலத்தின் மிஷினுக்கு அதிபதியும், றைவருமாகிய உலக

கிருஷ்டி கர்த்தா யாதாவதொரு வஸ்துவின் குணத்தைத் தடுத்து விடின் ஆச்சரியப்படுகின்றனர்.

பூத உடலுடைய பாவச்செய்கையின் நீர் இறங்கி அகக்கண்ணின் பிரகாசம் மங்கிப்போய், அல்லாஹு தஆலா இல்லை என கூறுகின்றவர்களான மாதாவைப் பூசிப்போர், நாஸ்திகர், மார்க்கமற்றோர், முல்ஹித் ஆகியோர்களை நாம் முன்னிலைப்படுத்திக் கூறவில்லை. அன்னோர்களை முன்னிலைப்படுத்தி அவர்களிடம் சம்பாஷிப்பதற்கு வேறு வழி யுண்டு. அஃதாவது:— வானலோகத்தின் ஆயுதங்களினால் அன்னோர்களின் ஆத்ம கண்களுக்கு ஆப்ரேஷன் செய்யவேண்டும். ஆத்ம கண்களில் இறங்கியிருக்கும் பாவச்செய்கையின் நீரைக் கறைத்து, சுத்தப்படுத்தி, ஆலமெ அக்பர், ஆலமெ அஸ்கர் ஆகியவைகளின் மூலமாய் சிகிச்சை செய்து, அல்லாஹு த ஆலாவின் இல்மு, குத்ரத், ஸிபத் முதலியவைகளினால் தயாரிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடி போட்டுவிட்டால், அவர்களுக்கு ஆத்மக் கண் (அகக்கண்) திறந்துபோகும். அதுபோழ்து அவர்கள் நம்முடைய போதனைகளையும், அல்லாஹு த் ஆலாவின் இல்மு, குத்ரத், ஸிபத் முதலியவைகளையும் ஒப்புக்கொள்ளுவார்கள். நபிமார்களின் முஅஜிஸாக்களைப் பார்க்கவும், அதை ஆலோசிக்கவும் செய்வார்கள்.

அகக்கண் ஆத்ம தீபத்தின் உதவியால் பார்த்து ஒப்புக் கொள்ளுபவைகளை, நபிமார்களின் முஅஜிஸாக்களை மறுப்போர், ஆத்ம தீபத்தின் உதவியற்ற புத்தியையும், வெள்ளை யெழுத்துடைய கண்களையும் கொண்டு, அவைகள் இயற்கை சட்டத்திற்கு மாற்றமானவைகளென மொழிவதற்கு முனைந்து விடுகின்றனர். மய்யத்து (பிணம்) உயிர் பெற்று எழுந்திருப்பது, உயிர்ப்பிராணிகளின் உக்கி, மடித்துப் போன எலும்புகளும், சதையும் ஒன்று பட்டு உயிர் பெறுவது, துளிர் விட்டெரியும் நெருப்பிலிருந்து உயிருடன் வெளியாகுவது, கற்பாறை, விரல் ஆகியவைகளிலிருந்து ஜல ஆறு ஓடுவது இன்னம் சந்திரன் பிளவுபடுவது போன்றவைகள் உண்டாகுவது இயற்கை சட்டத்திற்கு முற்றும் மாற்றமானவைகளென மறுக்கின்றனர். ஏனெனின், உலக நடவடிக்கையின் பேரில் ஆராய்வோமாயின், நெருப்பு எரிக்கும் குணமுடையது. இறந்தவர் எப்பொழுதாவது உயிர் பெற்றதாகத் தெரியவில்லை என்பது போன்றவைகளை மொழிந்து, மேற்கூறிய காரியங்கள் நடைபெறுவது சட்டத்திற்கு மாற்றமானவைகளென கூறுகின்றனர்.

இன்னோர்களிடத்தில் விண்ணப்பித்துக் கொள்ளுவதாவது:— அல்லாஹு தஆலா இல்மு, குத்ரத் போன்ற ஸிபத்துக்களைத் தன் ஆதிக்

கத்தில் வைத்திருப்பவன்; அவனுடைய குத்ரத்தினாலேயே உலக சிருஷ்டிகள் யாவையும் படைத்திருக்கின்றான். ஒவ்வொரு வஸ்துகளின் ஒவ்வொரு குணமும் அவனின் பரிசுத்த குத்ரத்துடைய கரத்திலிருக்கிறது; ஆத்ம உலகின் பிரகாசத்திற்காக நபிமார்களையும், ரஸூல் மார்களையும் அவனே நியமித்தான்; நபித்துவத்தின் தீபப் பிரகாசமின்றி அல்லாஹுதஆலாவின் ஸிபத்துகளை யுள்ளா உள்ள படி அறிவதற்கு முடியாது. சூரியன், சந்திரனுடைய நடவடிக்கைகளைப் போல், நபிமார், ரஸூல்மார் ஆகியோர்களின் நடவடிக்கைகளும் மாந்தர்களின் சக்திக்கு மேம்பட்டது. ஆகையால், நீங்கள் யோசனைச்செய்து பார்ப்பீர்களாயின், நபி, ரஸூல் முதலானோர்களால் அற்புதமாய் வெளியாகும் காரியங்கள் யாவும், அன்னோர்களின் இஷ்டத்திற்கு வெளியாகவில்லை. ஆனால், அவர்களையனுப்பிய அல்லாஹுதஆலா அவர்களை மெய்ப்பிப்பதற்காக அவர்களின் கரத்தில், மேற்கூறிய காரியங்களை வெளியாக்கியிருக்கிறான் என்பது நன்கு புலனாகும். (தொடரும்.)

நயிச்சேரியா முஸ்லிம்களின் நிலைமை.

(ஓர் முஸ்லிம் யாத்ரீகர் எழுதியது.)

பரிசுத்த இஸ்லாமின் அதிகியாதியுடைய சகோதரத்துவம் நாற்பது கோடி முஸ்லிம்களையும் ஒன்று சேர்த்திருக்கிறது என்றும், அவ்விஸ்லாம் உலகின் எல்லா பகுதிகளிலும் பரவியிருக்கிறதென்றும் சாதாரணமாய் முஸ்லிம்கள் தங்களுடைய வியாசங்களிலும், பிரசங்கங்களிலும் அதிபெரும் பெருமைப் பாராட்டுகின்றனர். ஆனால், அப்பெருமைப் பாராட்டுபவர்களிடம் "நீங்கள், உலகம் சூழ்ந்த உங்கள் சகோதரர்களின் உண்மை நிலைமையை நன்கறிந்திருக்கிறீர்களா?" என்று கேட்டால், அன்னோர் நீண்ட மௌனத்தை யடைகின்றனர். படிப்பில்லாதவர்களைப் பற்றி யெதுவும் சொல்லிக்கொள்வதற்கில்லை. ஏனெனின், அவர்கள் இஸ்லாமையே நன்கறியாதிருக்கின்றனர். ஆனால், "முஸ்லிம்கள் உலகின் எக்கோணங்களிலிருக்கின்றனர். அவர்களின் உண்மை நிலை எவ்வாறு இருக்கிறது" என்பதை, நம்மவர்களில் படிப்பாளி, நல்ல ஞானமுடையவர்களென மதிக்கப்படு

வோருங்கூட தெரிந்துக்கொள்ளப் பிரியப்படுகிறார்களில்லை. ஆகவே, யான்(முஸ்லிம் யாத்ரீகர்) அதிகஷ்டத்துடன் லண்டன்மா நகரிலிருந்து கரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் மூன்று மாதங்கள் பிரயாணஞ் செய்து, முஸ்லிம்கள் அதிகமாய் வாசஞ்செய்யும் பூமியின் ஓர் கோணத்தை யடைந்தேன். அப்பகுதி முஸ்லிம்களின் நிலைமையை இவ்வியாசத்தின் மூல்யமாய் நேயர்களுக்கு அறிவிக்கிறேன்.

அரேபியாவுக்கும், ஆப்ரிக்காவுக்கு மிடையில் ஆயிரக்கணக்கான மைல்களின் விஸ்தீர்ண முண்டாயிருக்கிறது. அக்காலத்தில் கப்பல்களும், ரயிலும், மோட்டாரும், மற்றும் நாகரீக ஏற்வாகனங்களும் இல்லாதிருந்த நிலைமையிலும், இஸ்லாமிய கல்விமான்கள் அரேபியாவின் பாலைவனத்திலிருந்து, ஆயிரக் கணக்கான மைல்களுடைய யாத்திரைச் செய்து, பரிசுத்த "இஸ்லாம்" என்ற கொடியை உலகின் மூலை முடுக்குகளிலும் நிலைநாட்டி வந்திருப்பதை, ஆராய்ச்சி செய்யும்போழ்து ஹிருதயம் திடுக்கிட்டுப் போகிறது. பாருங்கள் மேற்காப்பிரிக்காவில் நயிச்சேரியாவென்ற மாகாணம் எங்கிருக்கிறது? பக்தாதின் ஹாரூன் ரஷீத் எங்கிருந்தார்? லீகோஸ் நயிச்சேரியாவின் ஓர் அதிபெரும் துறைமுகப் பட்டணமாகும். பூகோளப் படத்தில் நீங்கள் நோட்டமிடுவீர்களாயின், ஐரோப்பாவில் கானிஸ்தாந்திநோபிள் இருப்பது போலவே, ஆப்ரிக்காவில் லீகோஸ் பட்டணம் இருக்கிறது. சமீபத்தில் எடுக்கப்பட்ட ஜனக் கணக்குப்படி, லீகோஸில் ஒரு லட்சம் ஜனங்கள் இருக்கின்றனர். அவர்களில் பகுதிக்கு மேற்பட்டவர்கள் முஸ்லிம்களாகும். முற்காலத்து உயர்தரமான முஸ்லிம் கல்விமான்கள் இஸ்லாமின் கல்வியை லீகோஸிலும், அதன் சுற்றுபக்கங்களிலுள்ள லியோ, கோள்டு கோஸ்டு ஆகிய மாகாணங்களிலும் வருடக் கணக்காக யாத்திரைச்செய்து, பெரும் பாலைவனத்தின் அதி பயங்கரமான கஷ்ட நிஷ்டூரங்களுக்கு ஆளாகி "இஸ்லாம்" என்ற பூண்டை யூன்றினார்கள். பின்பு அப்பூண்டுக்கு ஜலம் வார்ப்பவர்களுமில்லை; அதைக் கவனிப்பவர்களுமில்லை. ஆனால், அல்லாஹுதஆலாவின் கிருபை மழையால் அப்பூண்டு இதுவரையில் துளுத்துக் கொண்டிருக்கிறது. அம்மழையின் பொருட்டினாலேயே இன்று மேற்காப்ரிக்காவில் லக்ஷக் கணக்கான முஸ்லிம்கள் உண்டாயிருக்கின்றனர்.

லீகோஸின் கடற்கரையிலிருந்து அறுநூறு மைல்களுக்கப்பால் சரித்திர சம்பந்தமான "கானூ" என்ற பட்டணம் அதிகியாதியுடையதாக விருக்கின்றது. அப்பட்டணத்தின் ஜனத்தொகை பல லக்ஷமாகும். அவர்கள் யாவரும் முஸ்லிம்களே. கைத்தொழிலினால்

இப்பட்டணத்தை ஐரோப்பியர்கள் மேற்காபிரிக்காவின் "மாஞ்செஸ்டர்" என மதிக்கின்றார்கள். அப்பட்டினம் இங்கிலீஷ் ஆட்சியின் கீழ் இருப்பினும், பட்டணத்து சீர்திருத்தத்தின் சூச்சமக் கயறு கானூ பட்டணத்து அமீரின் கைவசத்திலிருக்கிறது.

அத்தேசத்தின் சீதோஷ்ணம், வெள்ளாண்மை, விளைவு பொருள் ஆகியவைகள் நல்ல ஸ்திதியில் இருக்கிறது. பச்சை பயறே அத்தேசத்தின் முக்கிய விளைவுபொருளாகும். வருடா வருடம் லக்ஷக் கணக்கான டன் பாசிபயறு ஐரோப்பா தேசங்களுக்கு ஏற்றுமதியாகிறது. அதிலிருந்து ஐரோப்பியர்கள் கோல்ஸா ஆயில், இன்ஜின் ஆயில், லிப்ரிக் டங்கு ஆயில் போன்ற எண்ணெய் எடுக்கின்றார்கள்.

மேற்காப்ரிக்கா முஸ்லிம்கள் அரபியர்களைப்போல் உடையணிகின்றனர். அநேகமாய் ஒவ்வொருவருக்கும் மூன்று, அல்லது நான்கு மனைவிகளுண்டு. பெண்கள் வீட்டின் காரியங்களைச் செய்வதோடு, வியாபாரஞ் செய்கின்றனர். ஆகவே, ஆடவர்கள் ஜீவனத்திற்கு சம்பாதிக்கவேண்டிய பொருப்பைவிட்டும் நீங்கி, நற்பாக்கியமுடையவர்களாக விருக்கின்றனர். ஆண் பெண் அடங்கலும் தொழுவது, நோம்பு நோற்பதில் அதிகவலை எடுத்துக் கொள்ளுகின்றனர். திருடுவது, மதுவுண்ணல் முதலியவைகளைப் போன்ற துர்க்கிருத்தியங்களை அவர்கள் பழிக்கப்பட்ட காரியங்களாக எண்ணுவதில்லை. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் வருடா வருடம் ஹஜ்ஜுக்காக பெரும் தூரத்தொலையான யாத்திரையைக் கடந்து செல்லுகின்றனர். அவர்கள் ஒரு பைசா கூட இல்லாதவர்களாய் ஓர் மண்கலயம், தொழுகைக்காக ஈச்ச ஓலையால் செய்யப்பட்ட ஓர் தடுக்குப்பாய், ஒரு தஸ்பீஹ்—ஜெபமாலை ஆக மூன்று வஸ்துகளையெடுத்துக் கொண்டு, மிக கஷ்ட நஷ்டங்களுடைய நீண்ட யாத்திரைச் செய்வதற்காக ஒரு வருடத்திற்கு முன்னதாகவே புறப்பட்டுவிடுகின்றனர். அவர்கள் ஹஜ்ஜுக்குச்செல்ல எடுத்துக் கொள்ளும் முயற்சியை இந்திய தனவந்தர்கள் நோட்டமிடுவார்களாயின், அவர்களுடைய ஆவி நடுக்கமுறும். ஆனால், அவர்களுடைய ஈமானின் பலமாகிறது ஹஜ்ஜின் யாத்திரையில் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களைப் பொருட்படுத்துவதில்லை. அவர்களில் செல்வத்தையுடையவர்கள் ஹஜ்ஜுக்குச் செல்லுவதில் பாராமுகமாய் இருக்கின்றனர். ஹஜ்ஜுக்குச்செல்வோர்கள் மக்காவுக்குச் சென்றதும், ஹஜ்ஜை நிறை வேற்றிவிட்டு, எதையோ நினைத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பிவிடுகின்றனர். வந்ததும் தங்கள் தேசத்தோர்க்கு ஹஜ்ஜுக்குச் செல்லுவதற்கான ஆசையை யூட்டுவதோடு, இஸ்லாமிய பிரசாரத்தையும் செய்கின்ற

னர். பொதுவாய் நயிச்சேரியாவின் முஸ்லிம்கள் இஸ்லாமின் ருக்குன்களையும் அறிந்திருக்கவில்லை. ஆனால், தொழுவது, நோம்பு நோற்பது ஆகிய இவ்விரண்டிலும் அதி முயற்சி யெடுத்துக்கொள்ளுகின்றனர். காஞா என்ற பட்டினத்தில் கிறிஸ்தவ மிஷனரிகளால் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்திருப்பவர்களும், அம்மார்க்கப்படி பேரிடப்பட்டிருப்பதோடுங் கூட, தொழுகையையும், நோம்பு நோற்பதையும் விடுவதில்லை.

லீகோஸ் முஸ்லிம்கள் மது விற்பதன் தொழிலை கியாதியாகவும், அதிக இலாபகரமானதாகவும் எண்ணிக் கொண்டிருப்பது தான் விசனிக்கத்தக்கது. இஸ்லாம் மார்க்கம் மதுவுண்ணல், மதுவிற்றல் ஆகியவைகளை ஹராமாக்கியிருக்கிறதென்று கூறினால், அதைக் கேட்டு அவர்கள் அதியாச்சரியப்படுகின்றனர். அருவெறுக்கக் கூடிய காரியங்களின் தாயாகிய மதுவுண்ணல், மேற்காபிரிக்கா முஸ்லிம்களின் மூளையையும், ஹிருதயத்தையும் ஆட்கொண்டிருக்கிறது. எதுவரையில் அவர்களிடம் மதுவுண்ணல் குடிகொண்டிருக்கிறதென்றால்:—அம்மூதேவி பிடித்தவர்கள் தொழுதும் போழ்தும் மது வருந்துகின்றனர். ஒரு கையில் தஸ்பீஹ் இருந்தால், மறு கரத்தில் மதுவின் கிளாசுஇருக்கிறது.

அஹ்மதியாவைச் சேர்ந்த ஓர் காதியானி கூட்டம் லீகோஸ் பட்டணத்திற்குச் சென்று, இஸ்லாம் பிரசாரஞ் செய்வதற்காக பள்ளிக்கூடமொன்று ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களின் வியாசங்களினாலும், பிரசங்கங்களினாலும் அத்தேச முஸ்லிம்களுக்குள் பிளவுயேற்பட்டு, அஹ்மதியர், அஹ்மதியல்லாதவர் என்கிற தர்க்கமும், வேற்றுமையும் அதிக மும்முறமாய் தலைவிரித்தாடுகின்றது.

இந்திய முஸ்லிம்களும், முக்கியமாய் சங்கை வாய்ந்த உலமாக்களுமாகிய நீங்கள் இத்துணை தூரத்திலுள்ள நுங்கள் சகோதரர்களின் உண்மை விஷயங்களையறிவது, அவர்களைச்சீரிய இஸ்லாமின் நேர்வழியில் நடக்கும்படி நற்போதனை செய்வது ஆகியவைகள் உங்கள்பேரில் கடமையல்ல வென்று நினைக்கின்றீர்களோ? கைதேமே! விசனமே!! ஹாய் உலமாக்களே!!! மேற்காபிரிக்காவின் முஸ்லிம்கள் துர்க்கிருத்தியம், ஆத்மவியாதி முதலியவைகளில் சிக்குண்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான மைல் தூரமுள்ள அதி கொடூரமான யாத்திரை செய்து, ஆபிரிக்காவின் குப்ருடைய இருள்சூழ்ந்த அதிபெரும் விஸ்தீரணமான பூமியை, "இஸ்லாம்" என்ற பொழுதினால் ஜ்வலிக்கச் செய்த நம்முன்னோர்களின் அடிச்சுவடியின் பேரில்

நாம் நடக்கவேண்டுமென்று, இஸ்லாமின் சகோதரத்துவம் நம்மோடு யுத்தம் புரிகிறதென்பதை நீங்கள் மறந்து விடவேண்டாம். விழியுங்கள்! துயில் விட்டு எழுந்திரியுங்கள்!! உங்கள் வீரதனத்தை இஸ்லாமிய பிரசாரத்தில் காட்டுங்கள்!!!

இஸ்லாமும் ராஜீயமும்.

(மௌலானா அபுல் ஜலால் நத்வியவர்கள் எழுதுகிறார்.)

பரிசுத்த நம்சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கம் அகாயித்—நம்பிக்கை, இபாதத்—வணக்கம், அக்லாக்—சற்குணம் அல்லது ஹிருதய சீர்திருத்தம், மூஆமிலாத்—காரியாம்சம் ஆகிய நான்கையும் ஒருங்கே பொதியப்பெற்றிருக்கின்றது. மக்கட்களின் காரியங்கள் யாவும், உண்மையான நம்பிக்கையின் கீழ் ஆகக்கூடியனவாக விருப்பதன் நிமித்தியம் அகாயிதைக் கற்பிப்பது முக்கியமாகிறது. "மெய்யாக தொழுகையாகிறது (அதையனுஷ்டிப்பவனை) துர்க்கிருத்தியம், விலக்கப்பட்ட காரியம் ஆகியவைகளிலிருந்து விலக்கக்கூடியது" (சூரத்அன்கபூத்) என அல்லாஹுதஆலா தனது குர்ஆன் ஷரீபில் திருவுளமாகியிருப்பதற்கேற்ப, மனிதர்களின் நடவடிக்கைகளை சீர்திருத்தம் செய்யவேண்டுமென்பதே இபாதத்தின் நோக்கமாகும். அஃதே போல் தங்களின் காரியங்கள் சரிவர நடைபெற வேண்டுமென்ற நோக்கத்தை அக்லாக் கொண்டிருக்கிறது. ஆகவே, மார்க்கத்தின் எல்லா பகுதிகளிலும் "காரியாம்சம்" என்ற பகுதியே அதிவிசேஷமானது.

"நடவடிக்கையில் ஒருவரோடொருவர் ஒற்றுமைக்க வேண்டும்" என்ற பொருள் தீன் என்ற சொல்லில் பொதிந்திருக்கின்றது. தீன் என்பதற்கு சாதாரணமான நடவடிக்கை என்ற பொருளுமுண்டு. நம்பிக்கை, வணக்கம், சற்குணம் ஆகியவைகள் ஹிருதயத்தின் சீர்திருத்த சட்டதிட்டமென்று மட்டுமே மிகைப்பட அறிவிக்கிறது. அவ்விதமில்லையாயின் "மானிடர்கள் தங்களுக்குள் ஒற்றுமைக்க வேண்டும்" என்பதே தீனின் உண்மைப் பொருளாகும்.

யாதாவதொரு தேசத்தின் பாதுகாப்பு, அல்லது யாதொரு சமூகத்தின் ஒற்று வாழ்தலின் சம்பந்தமே ராஜீயமாகும். ஆகவே,

ராஜீயம் மார்க்கத்தில் ஓர் அதி முக்கியமான பாகமாகும். இஸ்லாம் மார்க்கம் மானிடர்களின் ஒவ்வொரு காரியங்களையும் நிர்மாணிக்கக் கூடியதாகும். நம்முடைய ஒவ்வொரு விஷயங்கள் சம்பந்தமாகவும் மார்க்கத்தில் கூறப்படாதவைகளொன்றுமில்லை. மன்னனின் கடமையும், குடிகளின் சுயேச்சையும், அவர்களின் தேசக்கடமைகளும், தேசத்தின் பாதுகாவல் போன்ற ஒவ்வொன்றையும் இன்னது ஆகும் இன்னதுஆகாதென்பது, தேசசகோதரர்களுடன் ஒற்றுமைக்கவேண்டுமென்பது, தேசத்திற் கிடையில் ஏற்பட்டிருக்கவேண்டிய சம்பந்தம், குற்றவாளியை சிக்ஷிப்பது போன்றவைகள் ராஜீய நாகரிகத்தில் சேர்ந்தவைகளென வெண்ணப்படும் விஷயங்கள் யாவற்றையும், நம்மவர்களுக்கு கற்பிக்கும் நேர்வழியின் தீபமே இஸ்லாம் மார்க்கம். ஆகவே, ராஜீயம் இஸ்லாமிலிருந்து வேறானது என்று எண்ணுவது மார்க்கத்திற்கு முற்றும் முரணானதாகும்.

சுயராஜ்யத்தின் தேட்டம் ராஜீயத்தின் ஓர் தேட்டமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதை யடைவதற்கான ஆலோசனைகள் யாவும் மானிடர்களின் மூளையைச் சார்ந்திருக்கின்றன. ஆயினும், அதற்கு மார்க்கத்திலும் உண்மையான சம்பந்த மிருக்கிறது. ஒவ்வொரு விஷயங்களைப்பற்றி உலக வாரம்பமுதற் இன்றுவரை எத்துணை ஆலோசனைகள் செய்யப்பட்டனவோ? இன்னமும் இன்று முதற் கியாமத்துநாள் வரையில் எவ்வளவு ஆலோசனைகள் செய்யப்படுமோ? அவைகள் யாவும் குர்ஆன்ஷரீபு, ஹதீதுஷரீபு ஆகியவைகளின் ஆலோசனைக்குப்பின் எல்லா நலவுதீங்கின் சம்பந்தமானவைகளைப்பற்றி நாம் சரியான தீர்மானஞ் செய்யக்கூடும். ஆகையால், சுயராஜ்யத்தின் அபேட்சையை மார்கத்திலிருந்து பிரிக்குமுன், நாம் மார்க்கக் கிரந்தங்களை ஆராயவேண்டும். சுயராஜ்யம் அடைய விரும்புவதின் சம்மந்தமாய் இஸ்லாம் மார்க்கம் என்ன தீர்ப்பளிக்கிறது? அதை யடைவதற்கான வழிகளை மார்க்க சட்ட திட்டங்களிலிருந்து பொருக்கியெடுத்துத் தீர்ப்பளிக்கவேண்டும். சுயராஜ்யம் அடைவதன் ஆலோசனைகள் உயரியதாகவும், மேன்மையுடையனவா? அல்லது வெறுக்கப்பட்டதாகவும், விலக்கப்பட்டதாகவு மிருக்கின்றதா? இதை அல்லாஹு த ஆலாவின் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வெறுத்திருக்கிறார்களா? அந்நாயகம் அவர்களை யுலக தீர்க்காலோசனையுடையவர்களாகவும், ராஜீயசம்பந்தத்திற்காகவும் உண்டாக்கவில்லை என நாம் எண்ணிக்கொள்ளுவதற் கில்லை. அவர்கள் அல்லாஹு த ஆலாவால் உலக ரக்ஷகராக வாக்கப்பட்டு, அனுப்பப்பட்டார்கள்,

அவர்கள் மானிடர்களின் ஜீவியவாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்திற்குரிய படிப்பினைகளேயையும் கற்பித்தார்கள். அவர்கள் உண்மையோடியைந்த ஜீவிய வாழ்க்கையாகிறது ஆள்வோர், ஆளப்படுவோர், பிரபு, ஏழை, சுயேச்சையுடையவன், அடிமை, சிறையாளன் ஆகிய ஒவ்வொருவர்களுக்கும் நேர்வழியைக் காட்டும் முன்மாதிரியான உஸ்வயெ ஹஸனுவாக விருக்கிறது. ஒவ்வோர் நிலைமையிலும் அவர்கள் சற்குணத்தைக் கொண்டு, நம்மவர்களுக்கு அநேக பாடங்களைத் தயாரித்துள்ளார்கள்.

வணக்கமும் அடிமைத்தனமும்.

ஓர் முஸ்லிமுடைய வணக்கமும் அவனுக்கு ராஜீய வழிகாட்டியாகும். நாம் தினசரி ஐந்து நேரம் தொழுதுவருகிறோம். 360 நாட்களில் 30 நாட்கள் நோம்பு நோற்கிறோம். முதலுண்டாயிருந்தால் ஜகாத்து கொடுக்கிறோம். முதலும் சக்தியுமுண்டாயிருக்கில் ஹஜ்ஜு செய்கிறோம். ஹஜ்ஜுமுழு உலகின் முஸ்லிம்களோடு உறவாடுவதையும், அவர்களிடத்தில் நட்புக்கொள்ளுவதையும் கற்பிக்கிறது. ஜகாத்து முதலுடையோனின் செல்வத்தில் பலரின் பாகமும் சேர்ந்திருப்பதாய் அறிவிக்கிறது. நோம்பு நோற்பது உலகில் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுக் கஷ்டப்படுவோர்களின் கஷ்டங்களை நம் ஹிருதயம் அறியும்படி செய்கிறது.

தொழுகை பலவித வணக்கங்களையும் ஒருங்கே அமையபெற்ற வணக்கமாகும். எல்லாவிதமான வணக்கங்களைப் பார்க்கினும் அது நம்மவர்களுக்கு அதிகப்பாடங்களைக் கற்பிக்கிறது. அஃதாவது:— "நிய்யத்" செய்வது எல்லா நற்காரியங்களும் நிய்யத் தென்ற அஸ்திவாரத்தின் பேரில் இருக்கவேண்டு மென்பதை அறிவிக்கிறது. "அல்லாஹு அக்பர்" என்ற தொடர் மொழியை உச்சரிப்பது அல்லாஹுதஆலாவைத்தவிர வேறெவனும் சங்கைக்கும், கண்யத்திற்கும் தகுதியுடையவனல்லன் என்பதை அறிவுறுத்துகிறது. அதுவே சுயேச்சையின் அஸ்திவாரமும், தலைவரைப் பூசிப்பதன் விரோதியும், ஆளப்படுவோனுகவும், அடிமையாகவு மிருப்பதன் வேரைக் கிள்ளியெறியக் கூடியதாக விருக்கிறது.

தொழுகையில் நாம் "இய்யாக நஃபுது, வஇய்யாக நஸ்தயீன்" என மொழிந்த பின்பு, "இஹ்தி நஸ்ஸிராதல் முஸ்தகீம்" என்று மொழியும் போழ்து, நம் ஹிருதயத்தில் பற்பலவிதமான பாடங்கள் உண்டாகின்றன. ஒவ்வொரு உரிமையுடன் சில பர்ளுகளும், ஒவ்வொரு பர்ளுடன் சில உரிமைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்

வொரு பர்லையும் ஒழுங்காய் நிறைவேற்ற வேண்டியது நம்மீது கடமையாக விருப்பது போல், ஒவ்வொரு ஹக்கை (உரிமையை) நிறைவேற்ற வேண்டியதும் நம்மீது அவசியமாகும். அல்லாஹு தஆலா ஏதாவதொரு காரியத்தைச் செய்யவில்லை என, அவன் பேரில் குற்றம் சாட்டுவதற்கு நமக்கு உரிமை கிடையாது. இந்நிலைமையிலும் நமக்கு வேண்டுவனவற்றை அவனுடைய தர்பாரில் கேள்பதற்கு சுதந்தரம் அளித்திருக்கின்றான். உலகில் யாதாவதொரு இராஜாங்கத்தின் மூலமாக சில கடமைகள் நம்மீது ஏற்பட்டிருக்குமாயின், அதேவிதமாய் நமக்கு செய்யவேண்டிய சில காரியங்கள் அவ்விராஜாங்கத்தின்பேரில் கடமையாக விருக்கின்றன. அக்கடமைகளைச் செய்து தரும்படி இராஜாங்கத்தாரிடம் கேட்பது குற்றமில்லை. அல்லாஹு தஆலாவின் சந்நிதானத்தில் அவன் பேரில் கடமையற்றவைகளைச் செய்து தரும்படி கேட்பதற்கு நாம் வெட்கப்படாதிருக்கிறோம். இந்நிலைமையில் உலக சமுகத்திடத்தில் நம்முடைய உரிமைகளைச் செய்து தரும்படி ஏன் கேள்கக் கூடாது? அல்லாஹு தஆலாவின் பொருத்தத்திற்கு நேர்பாடாகவும், அவனின் சட்டப்படி நடப்பதுடன், சுயேச்சையாகவும், கண்யமாகவும் இவ்வுலகில் ஜீவனம் நடத்தவேண்டியதுதான் நம்மீது கடமையாகும். அவ்விதம் ஜீவனம் செய்வதற்கு முயற்சி செய்வது நம்பேரில் பர்லாகும். அல்லாஹு தஆலாவின் பரிசுத்த சந்நிதானத்தைத் தவிர, ஏனையோரின் சமுகத்தில் நம்மை இழிவு படுத்திக்கொள்ளுவது நம்மீது ஹராமாகும். கண்யமும், மேன்மையும் நமக்கு இயற்கை உரிமையாகும். அல்லாஹு தஆலா, அவனின் ரஸூல் ஆகிய இருவருக்குப்பின் கண்ணியம் முஸ்லிமுக்குமட்டுமே உரியது. கண்யம், மேன்மையோடு ஜீவனஞ் செய்வது நம் மார்க்க பர்லாகும். இன்னும் அத்தன்மையான மேன்மை, கண்யம் ஆகியவைகளை யடைவதற்கு நாம் முயற்சி செய்வது ஈமானின் சொந்தமான காரியத்திலுள்ளது. இழிய ஜீவனஞ் செய்வது எவ்விதத்திலும் முஸ்லிம்களுக்கு ஏற்றதல்ல.

நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமாகி யிருக்கின்றார்கள்:— "லாயன்பகீ லில் மூமினி அன்யதில்ல நப்ஸஹு—தன் நப்ஸை (தன்னையே) கேவலப்படுத்திக் கொள்ளுவது மூமினானவனுக்கு அவசியமற்ற (கூடாதது" என்பதே. (திருமதீ) இந்த ஹதீதை மொழியக்கேட்ட ஸஹாபாக்கள் ஆச்சரியப்பட்டவர்களாய், "கைப யதுல்லு நப்ஸஹு?—எப்படி அவர்கள் (முஸ்லிமானதன் பின்) தங்களைக் கேவலப்படுத்திக் கொள்ளுவார்கள்?" தாங்கள் எக்கருத்தைக்கொண்டு இவ்விதம்

மொழிந்தீர்கள்? என வினவியதற்கு, நாயகம் முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "யதஅரினு மினல் பலாயி விமா லாயதீகு — நிவர்த்தித்துக் கொள்ள முடியாத கஷ்டத்தில் சிக்கு வது" என மொழிந்திருக்கிறார்கள். இந்த ஹதீதின் மூல்ய மாகவே "முஸ்லிம்கள் குப்பார்களிடத்தில் தாழ்ந்த உத்தியோகத் தில் அமர்வது மக்ரூஹ்" என புகஹாக்கள் தீர்மானித்திருக்கிறார் கள்.

நாம் தொழுகையில் "இய்யாக நஃபுது" என மொழியும் போழ்து, அல்லாஹுதஆலாவைத் தவிர வேறு எவனுக்கும் வணங்குவது ஹராம் — கண்டிப்பாய் விலக்கப்பட்டதென்பதன் உணர்ச்சி நம் ஹிருதயத்தில் உதிக்கின்றது. அடிமைத்தன (வணக்க) ம், அடிமை என்ற சொற்களின் சம்பந்தம் நமக்கு அறிவிப்பதாவது :— ஒருவருக்குமுன் அடிமைத்தனம் புரிவ தற்கே வணக்கமெனப்படும். அதன் மூல்யமாய் நாம் அடிமைத் தனம் புரிகிறோமென வெளியாக்கிறோம். அல்லாஹுதஆலா அல் லாதவைகளை நாம் நம்முடைய எஜமானனாகவெண்ணிக்கொள்ளுவோ மாயின், அது அல்லாஹுதஆலாவுக்கு இணைவைத்தலாகும். நாம் வேறு எவரையும் கண்ணியப்படுத்தி, கௌரவிப்போமாயின், அல்லா ஹுதஆலாவே சர்வ பெருமைக்குரியவன் என்பதில் பூர்ண நம்பிக் கையில்லை என ஏற்படுகிறது.

பிர்ஔனும், அவனுடைய உத்தியோகஸ்தர்களும் மொழிந்தி ருக்கிறார்கள்:—" அவர்களுடைய சமூகம் எங்களுக்கு சாஸ்டாங்கஞ் செய்து பூசிக்கும் நிலைமையில், அவர்களைப்போன்ற இருவர் பேரில் ஈமான்—நம்பிக்கைக் கொள்ளவேண்டுமோ?" என மொழிந்தார்கள். (ஸூரத் மூமின் அல்குர்ஆன்.)

இவ்விடத்தில் சற்று புலன் செலுத்தி ஆலோசித்து பாருங்கள்! பிர்ஔனும், அவனைச் சார்ந்தோர்களும் எவ்வணக்கத்தை தங்க ளுக்கு பனீஇஸ்ராயீல்கள் வணங்கினதாய் எண்ணிக்கொண்டார்கள்? யஅகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புத்திரர்கள் அல்லாஹுவுக்கு இணைவைத்தார்களா? பனீ இஸ்ராயீல்கள் பிர்ஔனுக்காகவா வணங் கினார்கள்? ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சகோதரர்கள் கிப்திகளின் பேரிலா தங்கள் குர்பானீயைச் செய்தார்கள்? ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய பாட்டன், பூட்டன்மார்கள் பிர்ஔன்வம்சத்திலுள்ள நபர்களைத் தங்கள் தேவர்களாகவெண்ணி னார்களா? இல்லை; இல்லை. அவர்கள் எப்போழ்தும் பகிரங்கமாய் இணைவைப்பதைத் தடுப்பவர்களாகவும், அதற்கு விரோதிகளாகவு

மிருந்தனர். அதன் பொருட்டு அன்னோர்கள் பற்பல விதமான கஷ்டநிஷ்டூரங்களை யனுபவித்தார்கள்.

நாம் இணையோடு "பகிரங்கம்" என்பதைச் சேர்த்திருப்பதன் காரணமாவது :—ஹகீகத்தில் இணையாகும் அநேகக் காரியங்களை மாந்தர்கள் இணையென்பதாக யெண்ணாமலே செய்து வருகின்றனர், நாம் ஆளப்படுவோர்களாக விருப்பது கேவலமாக விருப்பினும், அது மார்க்கத்தில் பாவமாக்கப் படவில்லை என எண்ணிக்கொள்ளுகிறோம். ஆனால், "(1) பனீ இஸ்ராயீல்கள் பிர்ஔனுக்கு அதிகத் தாழ்மையாக நடந்து கொண்டதையும், (2) அவனுடைய நிர்ப்பந்தமான ஆட்சிக்குட் பட்டிருந்ததையே" பிர்ஔன் "வணக்கம்" என நாமமிட்டிருந்தான்.

பனீ இஸ்ராயீல்களுடைய கேவலத்திற்கும், அவர்கள் பிர்ஔனை வணங்கினார்கள் என்று வெளியாக்குவதற்கும், பிர்ஔனையும், அவனின் உத்தியோகஸ்தர்களையும் உயர்பதவியானவர்களென அகாரணமாய் எண்ணிக்கொள்ளவும், அன்னோர்கள் தங்கள் பெருமை, கண்ணியம் ஆகியவைகளைப்பற்றிப் புகழ்வதற்கும் மேற்கூறிய அவ்விரண்டு காரியங்களே மூலகாரணமாக விருந்தது. இதை ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வணக்கம் என்ற சொல்லைக் கொண்டே விளக்கியிருக்கிறார்கள். "பனீ இஸ்ராயீல்கள் உன்னை வணங்குவோர் (அடிமை) களாக செய்துவைத்திருப்பதை, என்பேரில் பெருமை பாராட்டக்கூடிய ஓர் பாக்கியமாகயுன்னிடத்தில் வைத்திருக்கிறாயா?" என பிர்ஔனை நோக்கிக் கேட்டிருக்கிறார்கள்.

வாசகர்களே! நண்பர்களே!! மேற்கூறியவைகளை நன்கு நோட்டமிட்டுப்பாருங்கள். ஓ முஸ்லிம்களே! நீங்கள் தொழுகையில் "இய்யாக நஃபுது" என ஓதுவீர்களாயின், தயவுசெய்து உங்களுடைய அமல்கள் ஜாயிஸானவைகளாக விருக்கும்படி செய்து கொள்ளுங்கள். இன்னும் உங்களுடைய ஹிருதயமும் மூளையும், மற்றும் உறுப்புகளும் அல்லாஹுதஆலாவைத் தவிறயுள்ள யெதையும் வணங்காதிருக்கும்படி பேணிக்கொள்ளுவீர்களாக! அச்சக்தியை அல்லாஹுதஆலா நம்யாபேர்களுக்கும் தன் கிருபையினால் தந்தருள் புரிய கடவானாகவும். ஆமீன்.

நற்போதனைகள் :—(1) சுத்தமாக விருப்பது அதி உத்தமமானது. அது தொழுகையாளியிடமே இருக்கிறது. (2) தர்மஞ்செய்வது செல்வத்திற்கு அழகு. (3) தன்னை நல்லவன் என எண்ணிக்கொள்ளுபவன் கெட்டவன். (4) தன்னை புத்திசாலியாக நினைப்பவன் மடையன். (5) உஸ்தாது (உபாத்தியாயரு)க்கு தொண்டு செய்வதில் கல்வியுண்டாகிறது. (6) வாலிபனுடைய வணக்கம் மற்றெல்லா வணக்கங்களிலும் சிறந்தது.

மனவருந்தும் புத்தக வெளியீடு.

அதன் பிப்புறம் கிளர்ச்சிக்காரர்கள் மறைந்திருக்கின்றனர்.

முஸ்லிம்களின் ஒவ்வொரு தலைவர்களும், அவர்களின் பத்திரிகைகளும் ஒரே முகமாய், ஒரே எழுதுகோலாய் சுவாமி சிரத்தானந்தர் கொலை செய்யப்பட்டதன்மீது துக்கப்பட்டு, அவரின் கொலைப்பாதகர்மீது தங்களுக்குள்ள அருவருப்பையும், கோபத்தையும் வெளியாக்கினார்கள். இன்னம் அக்கொலைபாதகனுக்கும் முஸ்லிம்களுக்கு அவ்விஷயத்தில் யாதொரு சம்பந்தமுமில்லை; அப்பயித்தியக்கார அப்துர் ரஷீதுடைய செய்கையை இஸ்லாம் விலக்கியிருக்கிறது என்றும் உலகோர்க்கு அறிவித்திருக்கிறார்கள்.

ஹிந்துக்களே நோக்குங்கள்! காங்கிரஸ்வாதிகளே நோட்டமிடுங்கள்!! நம்முடைய அதிபர், நம் உடல், பொருள், ஆவி ஆகியவைகளைத் தத்தஞ்செய்வதற்கு முற்றும் தகுதிவாய்ந்தவர்களை முனியப்பட்ட, அழுக்கடைந்த ஹிருதயத்தையுடைய ஓர் ஹிந்து பற்பலவிதமாய் துர்ப்பாஷையைக்கொண்டு யெழுதி, அந்நபியின் கண்ணியத்தைக் கேவலப்படுத்தி, முஸ்லிம்களின் ஹிருதயத்தைத் துண்டு துண்டாக செய்துவிட்டான். சுவாமி சிரத்தானந்தர் கொலைப்புரியப்பட்டதால் ஹிந்துக்களுக் கேற்பட்ட துக்கத்திலும் பதின்மடங்கு ஆத்ரத்தையும், மனவருத்தத்தையும் உண்டுபண்ணிவிட்ட அப்புத்தகமெழுதியவனைக் கண்டிக்காமல் ஹிந்துக்கள்மௌன முற்றிருப்பது, எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலிருக்கிறது. கடவுள் ஹிந்துக்களுக்கு நற்புத்தியை யளிக்கவில்லையா? இதனால் ஏற்படும் கெடுதியை அறியவில்லை. முஸ்லிம்கள் தங்கள் கியாதிவாய்ந்த நபியின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்காக தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தஞ் செய்வதற்கு தயாராக விருக்கின்றார்களென்பதில் அவர்களுக்கு உணர்ச்சியுண்டாகவில்லை. அவர்கள் ஏன் மௌனம் சாதிக்கின்றனர்? அன்னோர்களின் எழுதுகோல்கள் ஏன் அசையவில்லை? இறுதியாகக் கூறுமிடத்து முஸ்லிம்களை ஹிந்துக்கள் மடையர்களென்று எண்ணிக்கொண்டார்களா? முஸ்லிம்கள் கபோதிகளல்ல. ஹிந்துக்களின் விஷமத்தனமான யெல்லாகாரியங்களையும் நன்கறிந்திருக்கிறார்கள். அஃதாவது:—இத்துர்க்கிருத்தியங்கள் தலைம

றைவாய் இருந்து நடிக்கும் நாடகமாகும். அது ஒவ்வொரு ஹிந்து வின் மூளை, ஹிர்தயம் ஆகியவைகளில் இரேகித்து விட்டது. மறைவாக முஸ்லிம் சிறுவர்களையும், மாதர்களையும் களப்பி சுத்தி செய்யப் படுகிறது. இந்தியாவிலிருந்து முஸ்லிம்களை யழித்துவிடுவதற்கு உத்தலிஸ் சரித்திரத்தைக் கற்பிக்க முயற்சிக்கின்றனர். அஃதேபோல் மறைவான கிளர்ச்சியின் பயனே "ரங்கீலா ரஸூல்" என்ற புத்தகத்தின் பிரசுரமும். மூன்று வருடங்களுக்கு முன்னதாகவே அதற்கு அஸ்திவாரமிடப் பட்டுவிட்டது. துப்பறியும் கவர்ன்மெண்டு அதிகாரிகள் ஏமாற்றமடைந்து, உண்மை நூலாசிரியனை விட்டுவிட்டு, பெயருக்கு நூலாசிரியனாகவும், சாதாரணமானவனாகவுமுள்ள ராஜ்பாலை கைதி செய்தார்கள். அவ்விதம் பெயரளவிலுள்ள ஒருவர் சிறைச் சென்றுவிடினும், அவரின் குடும்பத்தை போஷிக்க சங்கத்தன் தயாராக விருக்கின்றது. ஆனல், உண்மையான விஷயம் மறைக்கப்பட்டுப் போகிறது. முஸ்லிம்கள் ஒவ்வொரு விஷயங்களையும் நன்கறிகின்றனர் என்பதையும், மௌனநித்திரையிலிருந்து விழித்து விட்டனர் என்பதையும் தந்திரத்தையுடைய சமூகம் அறிந்து கொள்ளுவார்களாக!

ஆனபோதே, முஸ்லிம்கள் இது விஷயத்தில் கிளர்ச்சி செய்வதோடுமட்டும் நில்லாது. கவர்ன்மெண்டிடத்தில் அதிகம் நாம் கேட்டுக்கொள்ளவேண்டியதாவது:—"திரைமறைவிலிருந்து அசுத்தமான "ரங்கீலா ரஸூல்" போன்ற நூற்கள் எழுதப்படும் கிளர்ச்சியின் அந்தரங்கத்தைத் துப்பறிந்து பிடிக்கும்படியும், வைஸ்ராய் அவர்கள் சமூகத்திற்கு ஓர் பிரதிநிதிக் கூட்டத்தை யனுப்பி, ரங்கீலா ரஸூல் போன்ற அருவறுக்கக்கூடிய புத்தக மெழுதுவோர்களைத் தடுக்கத் தகுந்த சட்டத்தை ஏற்படுத்துவது, அல்லது திருத்தியமைப்பதோடு, அதன் மறைவில் ஓர் அதிபெரும் கூட்டம் இத்தகைய பிரசுரங்களை வெளியிட சதாவேலை செய்து வருகிறது. அக்கூட்டத்தினரைக் கண்டறிந்து தக்கபடி கண்டிக்காவிட்டால், திருட்டைத் தடுக்கத் தக்க சட்டதிட்டங்கள் கவர்ன்மெண்டால் ஏற்படுத்தப் பட்டிருந்தும், திருடர்கள் கொள்ளையடிப்பது போலவே, இச்சமூகத்தினர் சட்டதிட்டங்கள் ஏற்படினும் தங்கள் விஷமத்தனமான பிரசுர வெளியீட்டை நிறுத்தமாட்டார்கள் என்பதைத் தெரிவிக்கிறதுடன், இவ்விதமான விஷமப் பிரசுரத்தின் தொடர் நிறுத்தப்படாமல் நடந்துகொண்டே செல்லுமாயின், முஸ்லிம்கள் பொறுமை யிழந்து, தங்கள் பெண்சாதி பிள்ளை, சொத்து சுதந்தரம் உயிர் முதலியவைகளைக் காட்டினும் அதிக நட்புக்கொள்ள வேண்டிய தங்களின் திருத்

தூதர், ஈருலக ரக்ஷகர் ஜனுப் ஹஜ்ரத் காதிமுல் அன்பியா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கண்ணியத்தைக் காப்பாற்றும் பொருட்டு, கவர்ன்மெண்டு சட்டதிட்டத்திற்கு மீறிவிடுவார்களோவென சம்சயிக்கும்படி இருக்கிறது" என்பதையும் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

ஆகையால், இப்படிக்கொற்ற அபாயகரமான கிளர்ச்சியை யுண்டு பண்ணும் மரத்தை முளையிலேயே கிள்ளியெறிந்து விடவேண்டியது மிக முக்கியமான காரியமாகும். அவ்விதம் செய்யப்படுமாயின், அதன் கெடுதியைவிட்டும் முஸ்லிம் சமுகமும், கவர்ன்மெண்டும் தப்பி சாந்தியடையக் கூடும்.

முஹம்மது நபி ஈருலக லக்ஷகர்.

ஆண்டவன் திருக்குர்ஆனெ மஜீதில் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றான் :—" வமா அர்ஸல்னக இல்லா ரஹமதுன் லில் ஆலமீன்" (ஸூரா 21. ஆயத்து 107) இதன் பொருளாவது:—"இன்னம் நாம் உம்மை அனுப்பியது ஈருலகத்திற்கும் கிருபையாளராக இருக்க வேயல்லாது வேறல்ல" என்பதே.

கனவான்களே! நமது பரிசுத்த இஸ்லாம் மதத்தை போதிப்பதற்காக அவதரித்த ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் முதல், ஈஸா அலைஹிஸ்ஸலாம் வரையிலுமுள்ள நபிமார்கள் அனைவர்களும் அவ்வவ்வத் தேசத்திற்கும், அவ்வவ்வக் காலத்திற்கும், அவ்வவ்வக் கூட்டத்திற்கு மட்டும் அவதரித்திருந்தார்கள். நமது நபிகள் நாயகமோ எல்லா மனிதர்களுக்கும், முழுயுலகத்திற்கும் சத்திய வேத போதகராகவும், சற்குண சீலராகவும், தயாள சிந்தையாளராகவும், கிருபைக் கடலாகவும் அவதரித்திருக்கிறார்கள்.

திருமறையில் சொல்லியபடி நமது நபிகள் பெருமானவர்கள் முழு யுலகத்திற்கும் கிருபையாளராக விளங்கியிருக்கிறார்களா வென அவர்களின் ஜீவிய சரித்திரத்தை சற்று ஆராய்ச்சி செய்வோமாயின், அவர்கள் உண்மையாகவே சிநேகிதர்களிடத்திலும், பகைவர்களிடத்திலும், முஸ்லிம்களிடத்திலும், காபர்களிடத்திலும், தனவந்தர்களிடத்திலும், மிருதமாக ஏழைகளிடத்திலும், மனிதர்களிடத்திலு

மல்லாது, பிராணிகளிடத்திலும், சுருங்கச் சொல்லில் முழு யுலகத்திற்கே கிருபையாளராக விளங்கியிருக்கிறார்கள்.

நபிபெருமானவர்கள் தங்களது சிநேகிதரிடத்தில் எவ்வளவு கிருபையுடன் நடந்திருக்கிறார்களெனில், அவர்களின் தோழர்களான ஸஹாபாக்களிடத்தில் சிறியோர், பெரியோர், எளியோர், வலியோர்என்ற பாகுபாடில்லாது சமத்துவமாய் நடந்து வந்தார்கள். ஸஹாபாக்கள் ஒவ்வொருவர்களும் தம்மைத் தான் நாயகமவர்கள் மிகவும் நேசிக்கிறவர்களா யிருக்கிறார்களென யெண்ணி சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருப்பார்கள். நண்பர்களிடம் இவ்வளவு அன்புடன் இருக்க, பகைவர்களிடம் எவ்விதம் நடந்து கொண்டார்களெனின், எவ்வளவோ மனிதர்கள் தங்களுக்கு தீங்கிழைத்தும், துன்புறுத்தியும் வந்தார்கள். ஆனால், நபிபெருமான் அவர்கள் அத்துஷ்டர்களுக்குத் தண்டனை விதிப்பதற்கு பதிலாய் மன்னிப் பளித்து வந்தார்கள்.

உதாரணமாக:—உஹது யுத்தத்தின் போது, உக்ப் இப்னு அபீ வக்காஸ்' என்பவர் நாயகமவர்கள் மீது கற்களெறிந்ததால், நாயகமவர்களின் தந்தம் ஷஹீதாகியபோழ்து, நாயகமவர்களின் தோழர்கள் நாயகத்தை நோக்கி, "நாயகமே! அவனை ஆண்டவன் சபிக்கும்படி துஆ கேளுங்களென்று" சொன்னதற்கு, நாயகமவர்கள் "சகோதரர்களே! நான் ஆண்டவனிடம் சபித்தலைத்தேடி ஜனங்களுக்கு தீங்கிழைக்கவோ, அல்லது அவர்களைத் துன்புறுத்தவோ அனுப்பப்படவில்லை" என்று சொல்லி, "ஓ ஆண்டவனே! என்னுடைய கூட்டத்தினர்கள் உண்மையை யுணரும்படி செய்வாயாக" என்று துஆ கேட்டார்கள். மற்றுமோர் உதாரணம்:— பத்ரு யுத்தத்தில் சிறையான குப்பார்களின் கால்களை முஸ்லிம்கள் இறுகக்கட்டி டேராவில் சிறைப்படுத்தி யிருக்கும் சமயம், நாயகமவர்கள் இரவில் தொழுவதற்காக அந்த டேராவிற்குள் சென்று தொழுதுகொண் டிருக்கும்போழ்து, சிறையாளர்களின் அழுகையைக்கேட்டு, அச்சிறையாளரை நோக்கி "உங்களுக்கென்ன கஷ்டம் நேர்ந்திருக்கிறது?" என வினவியத்திற்கு, அச்சிறையாளர்கள் "எங்களின் பாதங்கள் மிக்க இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கின்றன" என்று விடையளித்தார்கள். அதைச் செவியுற்ற நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அச்சிறையாளர்களைப் பகைவர்களென்று உணர்ந்திருந்தும், கிருபைகூர்ந்து அவர்களின் கட்டுகள் யாவற்றையும் அவிழ்த்து விட்டார்கள்.

மக்கமா நகரிலுள்ள பெரிய தனவந்தர்களிடம் நபிகள் நாயகமவர்கள் காட்டிய பேரன்பின் காரணமாக, அவர்களனைவோர்களும் தங்

கள் செல்வமனைத்தையும், நபி பெருமானவர்களினிஷ்டப்படி செலவு செய்வதற்கு சித்தமாயிருந்தார்களெனில், அவர்களின் நட்பை என்னென்றுரைப்பது! இதுவே அவர்களின் அன்பைக் காட்டுவதற்குப் போதிய அத்தாட்சியாக விளங்குகின்றது. ஏழைகளிடத்திலோவெனில், அவர்களை விசாரிப்பதற்காக அவர்களின் வீடுகளுக்கே செல்லுவார்கள். ஏழைகளை தங்களுக்குச் சமமானவர்களாகவெண்ணுவார்கள். எவ்வளவு திரவியமிருந்தாலும், வீடுதியில் சேர்த்து வைக்காமல் அன்றுடம் வந்து குவியும் பொருள்களை அன்றுடம் மாலைக்குள் ஏழைகளுக்கு பகிர்ந்துவிடுவார்கள். ஒரு நாள் அவர்களிடம் சுமார் 50,000 ரூபாய்கள் கொண்டுவரப்பட்டதை மஸ்ஜிதின் வாயலில் உட்கார்ந்து, அன்று மாலைக்குள் ஏழைகளுக்கு அப்பெரும் தொகையை விநியோகஞ் செய்துவிட்டார்கள். பலதடவைகளில் ஆண்டவனிடத்தில் அவர்கள் "ஏ நாயனே! நான் ஏழையாகவே உயிருடனிருக்கச் செய். ஏழையாகவே என்னை எடுத்துக்கொள். ஏழைகளுடனேயே நான் மறுமையிலிருக்கும்படி செய்தருள்" என்றுபிரார்த்தித் திருக்கிறார்கள். உலகசெல்வமில்லாததினுலுண்டாகும் மனோவருத்தம் ஏழைகளுக் குண்டாகாதபடி, அவ்வளவு அன்புடன் நடந்து கொள்வார்களென்றால், ஏழைகளிடம் அவர்கள் கொண்ட மிக்க அநுதாபத்திற்கு சொல்லவும் வேண்டுமோ ?

நபிபெருமான் அவர்கள் முஸ்லிம்கள்பேரில் மட்டுமல்லாமல், முஸ்லிம் அல்லாதாரிடத்தும் மிக்க அன்பும் இரக்கமுமுடையவர்களாயிருந்தார்கள் என்பதற்கு நபிபெருமான் அவர்கள் முஸ்லிம்களுக்குத் தீங்கிழைத்த யூதர்களின் வியாதியஸ்தர்களையும் பார்த்து வந்தார்கள். நஜ்ரான் மாகாணத்திலுள்ள கிறிஸ்தவர்கள் பெருமானவர்களிடம் தூதுவந்த போழ்து, அவர்களை பிறமதஸ்தர்களென பாவியாது அவர்களை பள்ளியிலேயே தங்கும்படி செய்ததல்லாமல், அவர்கள் வணக்கத்தையும் அங்கு நடத்திக்கொள்ளும்படி இடங்கொடுத்தார்கள். அவர்களுக்குத் தகுந்த உபசாரமும் செய்தார்கள்.

நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்களின் குழந்தைகளிட மட்டுமில்லாது, அன்னியர்களின் குழந்தைகளிடமும் அதிக அன்புடையவர்களாக விருந்தார்கள். நபிகள் நாயகமவர்கள் பிரயாணத்திலிருந்து திரும்பி வரும் போழ்து, பிள்ளைகளைக்கண்டால், அவர்களைத் தங்களின் வாகனத்தில் தூக்கி வைத்துக் கொள்ளுவார்கள். அவர்களுக்குப் பெருமான் அவர்களே முதலில் சலாம் சொல்லுவார்கள்,

அடிமைகளிடத்தில் நபிபெருமான் அவர்களுக்கு விசேஷ அன்புண்டும். அடிமைகளை "அடிமை" என்று சொல்வதுகூட அவர்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கும். ஆதலால், அடிமைகளை "அடிமை" என்று கூப்பிடாமல் "பிள்ளை" என்று அழைக்கும்படி நபிபெருமான் கட்டளை யிட்டார்கள். அடிமையாகவிருந்த ஸைத் அவர்களுக்குக் குரைஷி வம்சத்திலுள்ள தங்களின் அத்தைமகளை நபிபெருமான் அவர்கள் விவாகம் செய்துவைத்தார்க ளென்றால், அவர்கள் அடிமைகளை யடிமைகளாக பாவிக்கவில்லை என்பது தெற்றன விளங்குகின்றது.

மனிதவர்க்கத்தாரின் மீது மட்டும்ல்லாது, ஜீவப்பிராணிகளிடத்தும் நபிபெருமானவர்கள் பூரண அன்பு காட்டி வந்தார்கள். ஜீவஹிம்சை அராபியர்களுக்கோர் விளையாட்டாக இருந்தது. உயிர் பிராணியின் சரீரத்தின் ஒரு பாகத்திலிருந்து மாமிசத்தை அறுத்து அவர்கள் சமைத்து சாப்பிடுவது வழக்கம். நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவ்வழக்கத்தை அடியோடு நிறுத்தி விட்டார்கள். வீட்டில் பூனை வந்து பாத்திரத்திலுள்ள தண்ணீரைக் குடித்தால், அதை விரட்டாமல் பெருமானவர்கள் அப்பாத்திரத்தைச் சாய்த்துக் கொடுப்பார்கள்.

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மானிடவர்க்கத் தாரிடத்தும், ஜீவப்பிராணிகளிடத்தும் மிக்க கிருபையாளராக விருந்தார்களென்பதற்கு பல அத்தாக்ஷிகளிருப்பினும், அவற்றையெல்லாம் இங்கு எடுத்துரைக்க இடந்தாராதாகையால், சுருங்கச்சொல்லு மிடத்து, "நாயகமவர்களின் ஜீவியகாலத்தில் 3-நாள் தொடர்ச்சியாய் பசிதீர சாப்பிட்டதையான் காணவில்லை. ஆனால், அவர்கள் கேட்போர்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதில் கண்ணுங் கருத்துமாக யிருந்தார்களென்று" ஹஜ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் திருவுளம் பற்றியிருக்கிறார்களென்றால், நபிபெருமான் அவர்கள் மற்றவர்களின்மீது கொண்ட பேரன்பையும்; கிருபையையும் விளக்கமுறக் காட்டுகின்றது.

நபிகள் நாயகமவர்களை மனிதர்களுக் கேற்றமாதிரி நமூனாவாக அனுப்பியிருப்பதாக, ஆண்டவன் திருமறையில் கூறியுள்ளானாதலால், நாம் எவ்வுயிரிடத்தும் கிருபையாளராகவிருக்க வேண்டி, ஓர் உன்னத நமூனாவாக நமது நபிபெருமான் அவர்கள் முழுஉலகத்திற்கும் கிருபையாளராக சொல்லாலும், செயலாலும் தாங்களே நடத்திக் காட்டியிருப்பதால், அந்நமூனாவைப் பின்பற்றி நாமும் எவ்வுயிரிடத்தும் கிருபையுடையோராக நடந்து கொள்ள இறைவன் நம்மனைவர்களுக்கும் நல்லருள் புரிவானாகை. ஆமீன். கு. அப்துஸ்ஸலாம்,

பாப்புராஜபுரம்.

இஸ்லாம் பிரசாரகர் இலக்ஷணங்கள்.

(மௌலவி ஜனுப் முஹம்மது உமர் சாஹிப் எழுதுகிறார்.)

இஸ்லாம் மார்க்கப் பிரசாரத்தின் கருத்தும், அதில் பொதிந்திருக்கும் நோக்கமும் என்ன? அதிகியாதி வாய்ந்த கருத்துடைய இஸ்லாம் பிரசாரத்தின் கடமையைத் தன் தோளிலிருந்து நீக்குவதற்கு, தௌஹீதையும், நுபுவ்வத்தையும் பேச்சளவில் மொழிவது போதுமானதா? இல்லை. இஸ்லாம் மார்க்கப் பிரசாரம் சதா நடந்து கொண்டிருக்கவேண்டும். இஸ்லாம் பிரசாரத்தின் உண்மையை அல்லாஹுத ஆலாவின் சிருஷ்டிகளுக்கு அறிவித்து விடவேண்டும். இணை வைத்தல், வழிகேடு ஆகியவைகளைப் பரிசுத்த குர்ஆன்ஷரீபின் நற்போதனையைக் கொண்டு நிவர்த்தித்து, வெகு ஆழமும், இருளுமுடைய வழிகேட்டின் குன்றத்தில் விழுந்து தவிக்கும் ஆண்டவனின் அடியார்களை விடுவித்து, அவர்கள் அதிபிரகாசமுடைய இஸ்லாமின் ஜவலிப்பைப் பின் தொடர்ந்து நடக்கும்படி செய்யவேண்டுமென்பது அதன் பொருளாகும்.

ஒரு முஸ்லிம், உலகமாந்தர்களுக்கு முன் இஸ்லாமின் அதியாழ்ந்த கருத்து, அதன் ஆராய்ச்சி ஆகியவைகளின் போதனைக்குரிய கிரந்தத்தைத் திறக்கு முன்னும், இஸ்லாமிய பிரசாரஞ் செய்வதற்கு முன்னும் சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். அஃதாவது:—"லிமா தகூலூன மாலா தப்அலூன்"—சொல்லுவதுபோல் நடப்பதில்லை. அதாவது சொல்லுவதுபோல் நடத்தையும் இருக்கவேண்டுமென்பதற்கேற்ப, அவருடைய நடவடிக்கை, பேச்சு வார்த்தை முதலியவைகளை இஸ்லாமிய சட்டதிட்டங்களின்படி யுள்ளவைகளாகச்செய்து கொள்ளவேண்டும். அவ்விதம் செய்து கொள்ளுவதிலேயே முஸ்லிம்களுடைய பாக்கியமும் சீர்திருத்தமும் பொதிந்திருக்கின்றன. "கைருல் குரூனீ" காலங்களில் நல்லது என்னுடைய காலமெனநமது நபிகள் பிரான் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கும் காலத்திலுள்ள முஸ்லிம்கள் இஸ்லாமிய பிரசாரத்தில் "கால" என்றுமொழியுமிடத்தில் "ஹால"—விதம் என்பதை அதிகமாய் செய்தார்கள். அஃதாவது:—இவ்விதம் சொன்னார்களென மொழியுமிடம், இவ்விதம் செய்தார்களென ஒவ்வொரு

நடவடிக்கைகளையும் செய்து காட்டினார்கள். இதற்கு அநேக அத்தாக்ஷிகள் நமது நபிகள் பிரான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய உஸ்வயெ ஹஸ்னாவென்ற புகழ்குணத்திலும், சங்கை வாய்ந்த ஸஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களின் நடவடிக்கைகளிலும் அநந்தம் கோடி காணக்கிடக்கின்றன.

இன்று மார்க்கத்துடைய கெடுதியிலும் கெடுதி அதிபெரும் பாறைக்கல் இஸ்லாம் வழியின் நடுவில் வந்து விழுந்து கிடக்கிறது. அவ்விதம் அப்பாறைவந்து விழுந்திருப்பதன் பேரில் நீங்கள் கொஞ்சம் நோட்ட மிட்டீர்களா? இஸ்லாம் வாள் பலத்தினால் பரத்தப்பட்டது என்பதன் காரணம் தெரிந்ததா? யாதொரு சமூகத்தின் அதிவிசேஷ நற்குணங்கள் நீங்கிப்போகுமாயின், மிகபலஹீனமும், வழிகேட்டிலிருப்போருங்கூட எள்ளிநகைப்பர். முஸ்லிம்கள் இஸ்லாமிய பரிசுத்த நன்னடவடிக்கைகளின் படி நடப்பவர்களாக விருந்தவரையில், கீழ் தேசமுதல், மேலேதேசம் வரையில் எவராவது இஸ்லாமின் மீது ஏறிட்டுப் பார்ப்பதற்கும், அதைப்பற்றி தர்க்கஞ்செய்வதற்கும் சக்திபெற வில்லை. ஆனால், முஸ்லிம்கள் எப்பொழுது இஸ்லாமின் நற்குணமான நடவடிக்கைகளை விட்டும் நீங்கி, துர்க்கிருத்தியங்களில் சிக்குண்டனரோ, அன்றே அவர்களின் அதிபிரகாசமுடைய பொழுது சாய்வதற் காரம்பித்துவிட்டது. சங்கையின் ஸ்தானத்தை கேவலம் அடைந்து விட்டது. கல்வியின் இடம் மடமை யடைந்தது. இராஜியம் பறிக்கப்பட்டு, அதிகாரம் போய்விட்டது. சிறப்பினிடத்தில் இழிவும், தாழ்மையினிடத்தில் ஆண்மையும், பெருமையும், செல்வத்திடத்தில் தரித்திரமும் குடிகொண்டது. சுருங்கக்கூறுமிடத்து, முஸ்லிம்கள் எல்லாவிதமான நற்பாக்கியங்களையும் கையிழந்து விட்டனர். நாம் மேற்கூறியவைகளுக்கு அத்தாட்சிகளைத் தேடும் நேயர்கள், அந்த நாள் கண்யவான்களின் சரித்திரங்களை அதிகவனத்தோடு ஆராய்ச்சி செய்தால், நன்கு தெரிந்துகொள்ளுவார்கள். அஃதாவது :—பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தை எள்ளளவும் பிசகாது பின்பற்றியோர்கள் இஸ்லாமின் புகழ்குணங்களையும், அதனுடைய தெளிவையும் உலகோர்க்குத் துலாம்பரமாய் அறிவித்து விட்டார்கள்.

ரோம்தேசத்து கைஸர் அரசன் இஸ்லாமிய வீரர்களுடன் எதிர்த்து யுத்தம் புரிவதில் தோல்வியுற்றபோழ்து, தன் சைனியத் தலைவர்களை நோக்கி "இறுதியாக அந்த ஒரு பிடி முஸ்லிம்கள் உங்களில் எவ் விஷயத்தில் மிகைத்துவிட்டனர்? எண்ணிக்கையில் அதிகமா? யுத்தத்தளவாட சாமான்கள் அவர்களிடம் அதிக மிருந்தனவா? அல்

லது பலத்தில் உங்களைக்காட்டினும் அதிகமானவர்களா? மேற்கூறிய வைகள் யாதொன்றும் அம்முஸ்லிம்களிடத்தில் இல்லை என மொழி வீர்களாயின், அச்சொற்பத் தொகையினரோடு யெதிர்த்து யுத்தம் புரிந்து, அவர்களையே கைதிசெய்து ஏன் கொண்டுவரக் கூடவில்லை? எனக் கேட்டான்.''

கைஸரின் மேற்கூறிய ஆக்ரோஷமான கேள்விகளைச் செவி யுற்ற யுத்தத்தலைவர்கள் வெட்கத்தினால் தலைகுனிந்தனர். வெட் கக்கடலில் மூழ்கி, மௌன முற்றனர். அச்சமயம் அனுபோக மும், ஆராய்ச்சியுமுடைய ஓர் வயது முதிர்ந்த உத்தியோகஸ்தன் பதிலிறுத்ததாவது :—ஓ கண்ணியம் வாய்ந்த இராஜனே! நீர் மொழிந்தவைகள் யாவும் மெய்யே. அதில் யாதொரு சந்தேகமு மில்லை. முஸ்லிம்களைக் காட்டினும் உலக சம்பந்தமான யெல்லா விஷயங்களில் நாங்கள் மிகைத்தவர்களாயிருந்ததில் எவ்வித குறைவு மில்லை. ஆனால், அன்னோர்களைப் போன்று சகோதரத்துவம், சற் குணம், பொது ஜனத்தியாகம், பாவத்தைவிட்டும் நீங்கியிருத்தல், ஆண்டவனை தொழுதல், மெய்மொழிதல், பரிசுத்தம் (இந்நற்குணங் களே இஸ்லாமிய பிரசாரகர்களுக்கு அமைந்திருக்கக் கூடிய இலக்ஷ ணங்களாகும்.) முதலியவைகளை யாங்கள் எங்கிருந்து கொண்டுவரு வது? எங்களின் நிலைமையோ வேற்றுமை, பொய் மொழிதல், மது உண்ணல், துர்க்குணம், ஆண்டவனை வணங்காமை ஆகிய குணத்தினால் நாங்கள் சூழப்பட்டிருக்கும் போழ்து, எவ்விதம் முஸ் லிம்களை யெதிர்த்து வெற்றி பெறுவது? என்றார்.

நம் முஸ்லிம்கள் நற்குணம் நீங்கி, துர்குணம், கெடுதி ஆகிய வைகளில் சிக்குண்டிருப்பதால், தர்க்கம் செய்வதன் நிலைமையை விட் டும் வெகுதூரஞ் சென்றுவிட்டனர். ஆகையால், நாம் பின்பும் முன் மொழிந்த சொல்லுக்கே திரும்புகிறோம்.

இஸ்லாம் வாள் பலத்தைக் கொண்டு பரத்தப்பட்டது என சொல்லப்படுகிறது. இவ்விதம் சொல்வோர்கள் கீழ்வரும் விஷயங் களைக் கொஞ்சமும் ஆராய்ச்சி செய்தனரா? முதன் முதலில் இஸ் லாமிய ஊற்றுக்கண் எவ்விடத்தில் திறந்தது? முதலில் யாருடைய சிரசைக் கொய்தது? இஸ்லாமை ஏற்படுத்தியவரின் (அவருக்கு என் பெற்றோர்கள் காணிக்கையாகக் கடவது.) கரத்தில் எந்த வாள் இருந்தது? அவர்களிடம் எவ்வளவு சைனியமிருந்தது. அவர் களிடம் எப்படிப்பட்ட யுத்தத் தளவாடங்கள், அதற்கு வேண் டிய முஸ்தீபுகள், வெள்ளி, தங்க நாணயம் ஆகியவைகள் எவ்வளவு இருந்தன? இன்று உலகமாந்தர்களில் நான்கிலொரு பாகத்தினர்

தௌஹீ-ஏகதெய்வக் கொள்கை, ரிஸாலத்—நபித்துவம் ஆகியவை களுக்கு முன் சிரசு வணங்குகின்றனர். நீங்கள் சற்று நேரம் சரித்திர யேடுகளைப் பிரட்டிப் பார்ப்பீர்களாயின், நபிகள் பிரான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திவ்விய சமுகமிருந்து, அவர்களின் எல்லா புகழ் குணங்களையும், நடவடிக்கைகளையும் கற்றறிந்த அதிகியாதி வாய்ந்த பெரியோர்களான ஸஹாபா கிராம்களினாலேயே இஸ்லாமின் ஆரம்பப் பிரசாரம் நடந்திருக்கிற தென்பது வெள்ளிடை மலையைப்போல் தோன்றும். இதை இன்ஸைகளோ பேடியா (பிர்டானிகா) என்ற சரித்திராசிரியர் மெய்ப்பித்து பகர்ந்திருப்பதாவது :—

எந்த நம்பிக்கையை அவர் (நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) தன்னை முடிகியோர்கள் அஃதாவது, ஹஜ்ரத் கதீஜா, ஹஜ்ரத் அபூபக்கர் ஆகியவர்களின் ஹிருதயத்தில் உண்டாக்கினர்? எல்லாவித இழிவையும், கஷ்டங்களையும் அவர்கள் பன்னிரண்டு வருடங்களாய் சகித்தனர். இன்னும் அதிவீரத்தனத்துடன் எவ்விதமான செல்வத்தையும், அதிகாரத்தையும் ஒப்புக் கொள்ளாது மறுத்துவிட்டார். அவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, அவர்கள் ஜீவியகாலம் வரையில் விடாமுயற்சியுடன் செய்து வந்த பிரசாரத்தை விட்டுவிட வேண்டு மென்பதே நிபந்தனையாகவிருந்தது, என மொழியும் பிரேடு, வால்டேர், மராகஸ் போன்றோர்களின் அபிப்பிராயத்தை யொப்புக்கொள்ள முடியாது. ஆனால் பொதுவாய் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களு)டைய உண்மையை யொப்புக்கொள்ளுவது, அவர் தன்பேரில் நம்பிக்கை கொண்டிருந்தது, இன்னும் தன்னுடைய நபித்துவம் உண்மையென அறிந்திருந்தது ஆகியவைகளை மஹ்லர், காஸின், கார்லாயில், இர்விங்கு முதலானோர்களுடைய சொல் ஒப்புக்கொள்ளக் கூடியனவே என எழுதியிருக்கிறார். அவர்களுடைய விரோதியும் சாட்சியங்கள் கூறக்கூடிய பூரணமான கியாதிவாய்ந்தவர் நமது நபிகள் பிரான் அவர்களே.

மேற்கூறியவைக ளன்றியும், மார்க்க பிரசாரத்தில் "அதிகாரம், வாள்" ஆகிய இரண்டும் உபயோகப் படுத்தப் பட்டிருக்குமாயின், இன்று உலக மாந்தர்களில் மூன்றில் இரண்டு பாகத்தினர்களை கிறிஸ்தவர்கள் ஆட்சிபுரிகின்ற நிலைமையில், கிறிஸ்தவ மார்க்கம் உலகஞ்சூழ்ந்த மார்க்கமாக வில்லாததன் காரணம் யாது? கிறிஸ்துவ இராஜாக்களிடத்தில், கல்வி, நடத்தை, புத்தி, ஆலோசனை, கண்ணியம் பொருள் ஆகியவைகளில் ஏதாவதொன்று குறைவாக விருக்கின்றனவா? இன்னும் எவ்வளவுகோடி ரூபாய்களை கிறிஸ்துவ மிஷனரிகள்

கிறிஸ்துவ மார்க்கத்தைப் பிரசாரஞ் செய்வதில் செலவு செய்கின்றனர்? அவ்விதமிருந்தும், உலகஞ்சூழ்ந்தமார்க்கமாக கிறிஸ்துமார்க்கமில்லை. உண்மையில் மார்க்கபிரசாரத்திற்குப் பொருளும், செல்வமும் தேவை. ஆனால், இஸ்லாம் மார்க்கம் பொதியப்பெற்றிருக்கும் நற்குணம் தெளிவான நடவடிக்கை போன்றவைகள் அதிமுக்கியமாக வேண்டற்பாலது.

இன்று மேல்நாட்டு நாஸ்திகக் கொள்கையின் வெள்ளம் வெகு மும்முறமாய் கீழ்நாட்டில் பரவி வருகிறது. மார்க்கம் கொஞ்சமும் தேள்வையில்லை என்ற அதன்குணம் கீழ்நாட்டின் ஓர் அதிபெரும் சமுகத்தைக்கைக்கொண்டிருக்கிறது. தற்கால கல்விகற்றோர் மார்க்க வரம்பையும், அதன் ருக்குன்களுக்குக் கட்டுப்பட்டிருப்பதையும் விட்டும் சுயேச்சயை அறிவித்து விட்டனர். தொழுகை, நோம்பு முதல் இஸ்லாமிய நடவடிக்கை ஆகியவைகள் வீணான காரியமாக எண்ண ஆரம்பித்து விட்டனர். நாம் முஸ்லிமல்லாதார்களின் விஷயத்தைப்பற்றி எதுவும் சொல்லப்பிரியப்படவில்லை. ஆனால், நாம் நம் முஸ்லிம் சகோதரர்களுக்கு இவ்வளவு சொல்லிக்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. அஃதாவது:— அவர்கள் ஜீவித்திருப்பதில் முஸ்லிம்களாக ஆகியிருப்பதோடு, இஸ்லாமிய பிரசாரமும் செய்யவேண்டு மென்பதன் இரகசியமுமே பொதிந்திருக்கிறது.

மானிடபிரிவுகள் தொண்டின் விஷயமாய் இஸ்லாம் மதஸ்தாபகர் (அவர்கள் பேரில் ஆயிரமாயிரம் ஸலவாத்தும், ஸலாமும் உண்டாகுக!) பல தடவைகளில் எச்சரிக்கை செய்திருப்பதாவது:—அருவெறுக்கக்கூடிய கெடுதிகளாகிய இணைவைத்தல், குப்ரு முதலியவைகளிலிருந்து அல்லாஹுத ஆலாவுடைய அடியார்களை பரிசுத்தர்களாக்கி, இஸ்லாமிய போதனையைக் கொண்டு அவர்களைப் பிரகாசிக்கச்செய்வதுதான் மானிடப் பிரவிகளுக்கு செய்யும் அதி விசேஷமான தொண்டாகும் என்பதே. இவைகளை யறிந்தும் முஸ்லிம்கள் தங்கள் பேரில் கடமையான மார்க்கப் பிரசாரஞ் செய்வதில் பராமுகமாக விருப்பரோ?

நற்காலமாக இஸ்லாமிய விரோதிகளும், பகைவர்களும் முஸ்லிம்களிடம் எதிர்ப்போராடியும், தர்க்கஞ்செய்தும் அவர்களை விழிக்கச்செய்து விட்டனர். அதனால் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் கற்பிக்கப்பட்டு, மறந்து போன பாடங்களைத் திரும்பவும் படிக்கவாரம்பித்து வருகின்றனர். இந்தியாவின் பற்பல பாகங்களிலும் பல தரப்பட்ட கூட்டத்தினர், இஸ்லாமிய பிரசாரத்தை நடத்த முற்பட்டிருக்கின்றனர் என்பதை, இறுதியாக அதி சந்தோஷத்

துடன் மொழியாதிருக்கக் கூடவில்லை. முஸ்லிம்கள் அக்கூட்டத்தினர்களுக்கு அவர்களின் காரியத்தை நடத்திச் செல்வதற்கு அதிமுக்கியமாய் தேவையாகும் பொருள்களைத் தங்களால் இயன்ற மட்டும் பூர்ண ஹிருதயத்தோடு உதவிசெய்ய முற்படமாட்டார்களா?

நங்கையர் முழக்கம்.

ஷிர்க்கான நடவடிக்கைகளும், காபியா ஸாஹிபாவின் நற்போதனைகளும்.

"சந்தீலி" என்ற கிராமத்தில் வாசஞ்செய்து வந்த அஹ்மது என்பவர் மனைவியின் பெயரே காபியா. காபியா நிகாஹ் ஆகுமுன் குர்ஆன் ஷரீபுமுதல் இஸ்லாமிய யாதொரு கிதாபும் ஓதியிருக்கவில்லை. ஆனால், கல்வி கற்கவேண்டுமென்ற ஆவலும், அதற்கு வேண்டிய புத்தி தீக்ஷண்யமும் காபியாவிடத்தில் பொதிந்திருந்தன. காபியா சில மூதேவிபிடித்த பெண்களைப் போல் மடமையும், சோம்பேறியுமல்ல. காபியா கல்யாணமாகிய சில காலத்திற்குள் தன் கணவனிடம் குர்ஆன் ஷரீபு முதல், நம் பரிசுத்த இஸ்லாம்மார்க்கத்தின் பல கிதாபுகளையும் வெகுஆச்சரியமாகக் கற்று, மற்ற பெண்களுக்கும் இஸ்லாமிய நற்போதனைகளைப் போதிக்கக் கூடிய நிலைமையை யடைந்தார். இவ்விதம் புகழ்குணத்தையடைந்த காபியா ஸாஹிபாவிடத்தில் "பெருமை" என்ற பெயரே வெளியாகிறதில்லை. தன்னைமற்ற பெண்களைப்போல், அல்லாஹுதஆலாவுடைய அடியாள் என எண்ணிக்கொள்ளுவார்.

அக்கம் பக்கத்துவீட்டுப்பெண்கள் தங்கள் குடும்ப சம்பந்தமான காரியங்கள் ஒழிந்த நேரங்களில், கும்பல் கும்பலாய் காபியா ஸாஹிபாவிடம் வந்து பரிசுத்த இஸ்லாம் மார்க்க சம்பந்தமான சட்டதிட்டங்களையும், நற்போதனைகளையும் கேட்டுச் செல்லுவது வழக்கம். அஃதேபோல் ஓர் சமயம் பெண்கள் காபியா ஸாஹிபாவிடத்தில் "ஓ அருமைவாய்ந்த எங்கள் நாயகியே! எங்களுக்கு இஸ்லாமிய நற்போதனைகளைச் செய்து சீர்திருத்தம் செய்யும் பாக்கியவதியே!! "எந்த எந்த வார்த்தை, பேச்சு, நடவடிக்கை ஆகியவைகளினால், மாந்தர்கள் முஷ்ரிக்கு—இணைவைப் போர்களாகி விடுகின்றனர்? என்பதை

எங்களுக்கு விபரமாய் மொழியவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். காமியா ஸாஹிபா அவர்கள் ஓர் கிதாபைத்திறந்து, அப்பெண் களுக்கு கீழ்வருமாறு போதனை செய்தார்:—

முதலாவது:—ஒவ்வொரு இடத்திலும் ஆஜராகவிருப்பது, எவ்விடத்தையும் நோட்டமிடுவது, இரகசியமுதல் பராகசியம் வரையிலுள்ளவைகளைக்கேட்பது, தன் நாட்டத்தைக்கொண்டு மௌத்தாக்குவது, ஹயாத்தாக்குவது, வாழ்வைக்கொடுப்பது, தரித்திர ராக்குவது, வியாதியஸ்தனுக்குவது, சொஸ்தமாக்குவது போன்ற சக்திகள் நம் எல்லாம்வல்ல பரிசுத்த, அதிதயாளம், கிருபை ஆகியவைகளையுடைய அல்லாஹுதஆலாவுக்கு இருக்கிறதே யன்றி, வேறு எவருக்கும்கிடையாது. ஆகையால், நீங்கள் கூப்பிட்டால் உடனுக்குடன் பதிலுரைக்கிறேனென்ற, அந்த அல்லாஹுதஆலாவை விட்டுவிட்டு, மற்றோரிடம், அல்லது பீர், ஷுஹதா, இமாம், ஒலிமார் முதலானோர்களின் பெயர்களைக் கூப்பிடுவது, உட்காரும் போதும் எழுந்திருக்கும்போதும் அவர்களின் பெயரை மொழிவது, அவர்களின்பேரில் முராது செய்வது, நேர்ந்துக்கொள்ளுவது, யாமுஹையத் தீனே!, காதர் ஒளலியாவே! ஓ! காட்டுவா ஸாஹிபே! என்று கூப்பிடுவதும், அவர்களிடம் "எனக்கு வந்துற்ற ஆபத்துகளை நிவர்த்தி செய்யுங்களென்று கேட்பதும், பிள்ளைவரம் கேட்பதும், பிள்ளைகளின் தலையில் கொஞ்சத்தை க்ஷவரஞ்செய்து, மற்றதை ஒலிமார்கள் மயிரைக்கேட்டது போல் குடுமிவைப்பதும், தற்காகளுக்குப் போய் அவ்விடமுள்ள கிணற்றில் தலைமுழுகு வதாலும், அவ்விடங்களிலுள்ள விளக்கைத் திருடிக்கொண்டு போவதினாலும் பிள்ளைப் பேறுண்டாகிறது என்று எண்ணுவதும், ஒலிமார்கள் பெயரைச் சொல்லி சேவல், ஆட்டுக்கிடா போன்றவைகளை விட்டுவைப்பது, தேர், சந்தனக்கூடு முதலியவைகளை யிழுப்பது, தொட்டதற்கெல்லாம் அல்லாஹுதஆலாவின் திருநாமத்தை மறந்து, ஒலிமார்களைக் கூப்பிடுவது, கால்ரா காலங்களில் அரைகாசு ஒலிக்கென்று ஒரு பைசாவை துணியில் முடிந்துக்கையில் கட்டிக் கொள்வது போன்ற நூற்றுக்கணக்கான காரியங்களை செய்வது யாவும் ஷிர்க்கு—அல்லாஹுதஆலாவுக்கு இணைவைத்தலாகும்.

இரண்டாவது:—சிலகாரியங்களை அல்லாஹுதஆலா தன்னுடைய வணக்கமாக யேற்படுத்தி யிருக்கிறான். அஃதாவது:—ருகூஃ, ஸஜதா செய்வது, கைகட்டி நிற்பது, அவன்பேரில் முதலைச் செலவு செய்வது, நோன்பு நோற்பது, அவனுடைய இல்லமாகிய கஃபா

ஷரீபை ஸியாரத்து செய்வதற்காக ஸபர்போவது, அவ்விடத்தில் நாலாபுறத்தையும் சுற்றிவரு (தவாபுசெய்) வது, அவ்விடத்தில் நேர்ந்துகொள்வது, அதன்பேரில் கிலாப் போர்வைப் போர்த்துவது, அதன் வாயலுக்குமுன் நின்று துஆலா கேட்பது, அதில் வைத்து கட்டப்பட்டிருக்கும் ஹஜறுல் அஸ்வதை முத்தமிடுவது, அதன் திரையைப் பிடித்தவர்களாய் துஆ கேட்பது, அதன் நாலுபுறமும் வெளிச்சமுண்டாக்கி வைப்பது, அதற்கு விரிப்பு விரிப்பது, அதன் "ஸம் ஸம்" என்ற கிணற்று நீரை தபர்ருக்காக எண்ணி அருந்துவது போன்றவைகளே ஆண்டவனின் வணக்கங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

இவைகளன்றி பீர், நபி, (நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ரௌலாவை ஸியாரத்துச்செய்வதற்கன்றி) ஒலி ஆகியவர்களின் கபரை ஸியாராத்துச் செய்வது, அக்கபரை ஸியாரத்துச் செய்வதற்காக செல்லுவது, அதைத் தொடுவது, முத்தமிடுவது "உன்வாயில் மண்விழுக" வென்று பெண்கள் திட்டுவதற்கு சரியாய் அக்பர்களிலுள்ள மண்ணையள்ளி, தனக்கேற்பட்டிருக்கும் வியாதி போன்ற வைகளை அக்கபரில் அடங்கியிருப்பவர்கள் நிவர்த்தித்து விடுவார்கள் என்று எண்ணி, வாயில் போட்டுக்கொள்ளுவது. பூஞ்சாம்புராணியைச் சாப்பிடுவதும் கபரைச் சுற்றிவருவது, அவ்விடம் கைகட்டி நிற்பது, தொழுகுவது, அவ்விடத்தில் யாதொரு உயிர்ப்பிராணிகளை அப்பெரியார்களின் பெயரைச் சொல்லி அறுப்பது, போன்ற ஆயிரக் கணக்கான காரியங்களைச் செய்வது விலக்கப்பட்ட காரியங்களாகும்.

மூன்றுவது:— அல்லாஹுதஆலா சில காரியங்களைத் தன் அடியார்களாகிய நம்மவர்களுக்கு கற்பித்திருக்கிறுன். அஃதாவது:— உலகசம்பந்தமான எல்லாநடவடிக்கைகளிலும் அல்லாஹுதஆலாவின் பெயரை ஞாபகம் வைக்கிறதும், அவனுக்கு கண்ணியமாய் நடப்பது, பிள்ளை பேறுண்டானல், அல்லாஹுத ஆலாவுக்கு ஷுக்குர்—நன்றி நிறைவேற்றும் பொருட்டு அகீகா-கிடாய் அறுத்து தர்மஞ் செய்வது, அவர்களுள் ஆண்களுக்கு அப்துல்லாஹ், அப்துர்ரஹமான், அப்துர்ரஹீம் போன்றும், அல்லாஹுதஆலாவின் அழகிய திருநாமங்களோடு "அப்து" என்பதைச் சேர்த்தும், அல்லது நபிமார்களின் பெயர்கள், அப்பெயர்களோடு "முஹம்மது" என்பதைச் சேர்த்தும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பெயர்களாகிய முஹம்மது ஷரீபு, முஹம்மது காஸிம், நூர் முஹம்மது, குலாம் முஹம்மது போன்றும் வேறு அழகிய பெயர்

களை நாமஞ் சூட்டுவது, பெண்களுக்கு கதீஜா, பாத்திமா, ஆயிஷா, ஆமினா, ஹவ்வா, ஜுலைகா, ரஹீமா, மரியம், ஆஸியா ராபிஅ ஆகிய நற்பெயர்களை நாமஞ் சூட்டுவது, தின்பது உடுத்துவதில் அவனின் உத்திரவுக்கு நேர்பாடாக நடப்பது, அவன் விலக்கிய காரியங்களை விட்டும் விலகியிருப்பது, துக்கமும், சுகமும் அவனின் நாட்டப்படி நடக்கிறது, ஒருவேலையை வருங்காலத்தில் செய்வதாய் சொல்லிக் கொள்ளும்பொழுது "இன்ஷா அல்லாஹ்-அல்லாஹுதஆலா நாடுவானாகில்" செய்வேன் என்று மொழிவது, அடிக்கடி சத்தியஞ்செய்யக் கூடாது. ஒருசமயம் உண்மையின் பேரில் அவ்விதம் செய்யும்படி நிற்பந்த மேற்பட்டு விடுமாயின், அப்போது அல்லாஹுதஆலாவின் பேரில் தான் சத்தியஞ் செய்யவேண்டும்.

மேற்கூறியநற்காரியங்களைவிட்டுவிட்டுயாதொரு ஒலி,ஷுஹதா, அன்பியா, இமாம் ஆகியோர்களுக்கு ஆண்டவனுக்குச் செய்வது போல் சங்கை செய்வது அவர்களிடம் நேர்ந்துகொள்வது, "பிஸ்மில்லாஹ்" என்றுசொல்லு மிடத்தில் யாரஸூலல்லாஸ்! யாஅலீ! யாமுஹையத்தீன், யாகாதர் ஒளலியா! ஓ காட்டுவா ஸாஹிபே! என்பது போல் மொழிந்தவர்களாக எழுந்திருப்பது, உட்காருவது, பிள்ளையுண்டானால் அன்னோர்களிடம் நேர்ந்துகொள்வது, பிள்ளைகளுக்கு முகையத்தின் பிச்சை, காதர்பிச்சை, அப்துல் முஹம்மது, மதார் பகஷ் என்பது போன்று பேரிடுகிறது, இன்ன இன்ன நாளில் இன்ன இன்ன திசைக்குப் பிரையாணம் போகக் கூடாதென்பது, துல்கஃதா, ஸபர் மாதங்களில் நிகாஹ் செய்யக்கூடாது என்று மொழிவதும்,பஞ்சாவுக்குமுன் தலைசாய்க்கிறதும், குறி கேட்பதும், ஜாதகம் பார்ப்பதும், அவைகளை யுண்மையென நம்புவதும், இன்னம் அநந்தம் கோடி காரியங்களுண்டும். அவைகளைச் செய்வதும் பிதஅத்தாகும். சிலக்கால் குப்ரையும் வருத்திவைக்கும்.

தோழிகளே! இன்றுநேரம் அதிகமாகிவிட்டதால், இத்துடன் முடித்துவிடுகிறேன். இன்ஷா அல்லாஹ் மறு வியாழக்கிழமை இரவு நீங்களெல்லீரும் வருவீர்களாயின், இன்றைய நற்போதனையின் எஞ்சிய பாகத்தையும், கோஷாவிருக்க வேண்டிய விஷயமும், வேறுசில முக்கிய மஸ்அலாக்களையும் சொல்லுகிறேன். (வரும்)

சிறுவர்கள் பக்கம்.

அகாயிதுல் இஸ்லாம்

(1) அகீதாஹ்:— இவ்வுலகமும், அதன் கண்ணுண்டாகியிருக்கும் யாவும் முதலில் அறவே உண்டாயிருக்கவில்லை. பின்பு அல்லாஹுத ஆலாவின் சிருஷ்டிப்பால் உண்டாயின. (2) அகீதாஹ்:— அல்லாஹுதஆலா ஒருவன். அவன் யாரிடமும் தேவையற்றவன்.

முஸ்லிம்களும், குர்ஆன்ஷரீபும்.

(314-வது பக்கத் தொடர்ச்சி.)

சகோதரர்களே! நீங்கள் பாலப்பருவத்தை விட்டும் நீங்கி, வாலிபதிசையை அடைந்ததும் இரவுதவராது பிரயோசனமற்ற பொய் சரித்திரங்களையும், நாவல்களையும் படித்து உங்களின் விலைமதிக்கவொண்ணாத காலத்தை வீணில் போக்கிவிடுகின்றீர்கள். ஆனால், உலகவேதங்களில் மேன்மையான குர்ஆன்ஷரீபு நம்மைச்சீர்திருத்தி, நேர்வழிகாட்டுவதற்கு இறங்கியது என்றும், அதன் உத்திரவுகளை நன்கறிந்து அதன்படி நம் வாழ்க்கையை நடத்தவேண்டியது, நம் மீது பர்லு என அறிந்த வாலிபர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் இருக்கின்றனர்.

முஸ்லிம்களுடைய வீடு தவறாது குர்ஆன்ஷரீபு இருக்கிறது. அதை கம்காப் செய்த பட்டுப்பிடவைபோன்றவைகளின் ஜுஸுதானில் மிகபந்தோபஸ்தாக மேல்மாடங்களில் வைத்திருக்கின்றனர். யாராவது இறந்து போவாராயின், அவர் இறந்த மூன்றாம்நாள், ஏழாம்நாள் என்ற காலங்களில் மட்டும் ஓதுகின்றனர்.

ஓ சங்கைவாய்ந்த சிறுவர்களே! என்ன அநியாயம்! குர்ஆன்ஷரீபு அல்லாஹுத ஆலாவின் உத்திரவுகளையும், நன்மை தீமை இன்னது என்று அறிவித்து, நம் வாழ்க்கையைச் சீர்படுத்த வந்திருக்கிறது. ஆகவே, நாம் அக் குர்ஆனை அல்லாஹுத ஆலாவின் காலம்ஷரீபு என்று அறிந்து, அதன் ஒவ்வொரு ஆயத்தையும் நோட்ட மிட்டு, அதை அந்த அல்லாஹ்வின் சந்நிதானத்தில் இருந்து சம்பாஷிக்கிறோ மென்ற எண்ணத்தோடு நாம் ஓதிவருவோமாயின், நம் துர்க்குணங்கள் நீங்கி, நாம் நற்குணம் அடைவதுடன், வாழ்க்கை சீர்படும். உந்திலிஸில் அதிகியாதியோடு வெளிபோந்த அல்லாமா

அவன் யாருக்கும் பிள்ளையுமல்ல; தகப்பனுமல்ல. அவனுக்கு மனைவியுமில்லை. அவனைப் போன்றவன் வேறு எவனுமில்லை. (3) அகீதாஹ்:—எவ்வஸ்துவும் அவனுக்கு ஒப்பானதில்லை. அவன் யாவற்றினும் உயர்த்தியானவன். (4) அகீதாஹ்:— அவன் ஜீவித்திருக்கிறான். ஒவ்வொரு வஸ்துக்களின் மீதும் அவனுக்கு சக்தியுண்டும். எவ்வஸ்துவும் அவனுடைய அறியுதலைவிட்டும் நீங்கிதல்ல. அவன்யாவற்றையும் பார்க்கிறான், கேட்கிறான், வசனிக்கிறான். ஆனால், அவனுடைய வசனம் நாம் பேசுவது போன்றவையல்ல. அவன் நாடியவற்றைசெய்கின்றான். அதைத் தடுக்க எவனுக்கும் சக்தி கிடையாது; அவனே நாம் வணங்குவதற்கு முற்றும் தகுதிவாய்ந்தவன். அவ

ஹஜ்ரத் இப்னு அரபீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்கள் "புதிஹாதுல் மக்கியா" வென்ற வெகு பிரசித்த பெற்ற கிரந்தத்தில் குர் ஆன்ஷரீபு விஷயமாய் நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சியை வரைந்திருக்கிறார்கள். அந்நிகழ்ச்சியினால் குர் ஆன்ஷரீபுடைய ஓர் ஆயத்தின் மகிமை நன்கு புலனாகும்.

ஷைக் அக்பர் அவர்கள் எழுதியிருப்பதாவது:—ஒரு உஸ்தாதிடம் இரு சிறுவர்கள் நம் பரிசுத்த இஸ்லாம் மார்க்கப் படிப்புகளைப் பயின்று கொண்டிருந்தனர். அவ்விரு சிறுவரில் ஒருவர் ஹாபிஸ் குர் ஆன்ஷரீபைப் பாராயணஞ் செய்தவர். அச்சிறுவர் வசதியேற்பட்ட நேரங்களில் குர்ஆன் ஷரீபை ஓதிக்கொண்டே இருப்பார். இரவில் அவர் நபிலான தொழுகையைத் தொழுகவாரம்பித்து, ஸுபுஹு—விடியற்காலத்திற்குள் குர் ஆன்ஷரீபு பூராவும் ஓதி முடிப்பார். இவ்விஷயத்தை தன் உஸ்தாது இடம் மொழிந்தார். அதைக்கேட்ட உஸ்தாது "என் அருமை மாணவரே! இன்றிரவு நபில் தொழுகையில் நீர் குர்ஆன் ஷரீபை ஓதும்போழ்து, நான் உன்முன் இருப்பதாகவும், கலாம் ஷரீபை என்னிடம் ஓதிக் காண்பிப்பதாகவும் எண்ணிக்கொண்டு ஓதவேண்டும்" என மொழிந்தார்.

மறுநாள் காலையில் உஸ்தாது, ஹாபிஸா வாகிய சிறிவரை வினவியதற்கு அவர் "நான் இரவு தங்களுக்கு முன் ஓதுவதாக எண்ணிக்கொண்டு ஓதினதில், வெகுகஷ்டத்துடன் அரைவாசி குர் ஆன்ஷரீபு தான் ஓதமுடிந்தது" என மொழிந்தார். அச்சமயம் உஸ்தாது. ஹாபிஸுக்கு "இன்றிரவு குர் ஆன்ஷரீபை மிக அறிந்த ஸஹாபாகிராம் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களின் கூட்டத்தில் ஓதுவதாக எண்ணிக்கொண்டு ஓதவேண்டும்" என்றார். அதேபோல் கண்ணியம் வாய்ந்த மாணவர் தனது உஸ்தாது உத்திரவுபடி நடந்தார்.

லைப்போல் எவனுமில்லை. அவன் தன் அடியார்கள் பேரில் மிகத்த யாளமுள்ளவன். இராஜாதி இராஜன். எவ்விண்ணங்களை விட்டும் பரி சுத்தமானவன். தன் அடிமைகளை ஆபத்துகளில் நின்றும் காப்பாற் றுபவன். அவனே சங்கைக்கும், பெருமைக்குமுரியவன்; உலகி லுள்ள யாவற்றையும் சிருஷ்டிப்பவன்; அவனைத் தவிர வேறு எவனும் சிருஷ்டிப்பவன் கிடையாது. பாவங்களை மன்னிப்பவன்; அதி சக்தி வாய்ந்தவன்; யாவற்றிற்கும் இரணமளிப்பவன்; தான் நாடியவர் களுக்கு அதிகமாகவும், குறைவாகவும் அளிப்பான். நாடியவர்களைத் தாழ்த்தியும், நாடியவர்களை யுயர்த்தியுமாக்குவான் (இன்று உலகில் ஐவர் ஏழிய குடும்பத்தில் பிறந்து, சக்கரவர்த்திகளாகவும், இராஜவம்

மறுநாள் விசாரித்தபோழ்து, அவர் "இன்று கால்வாசி குர் ஆன் ஷரீபுதான் ஓத முடிந்தது" என மொழியகேட்ட உஸ்தாது சொன்னதாவது:—இன்றிரவு பரிசுத்த நமது நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திவ்விய சமுகம் ஓதுவதாகவும், அவர்கள் நின் ஓதலைக்கேட்பதாகவும் உன் ஹிருதயத்தில் எண்ணிக் கொள்ளவேண்டுமென்றார்.

அன்று காலையில் பாக்கியவானாகிய ஹாபிஸின் முகம்வெளுத்து, மஞ்சனித்திருந்தது. "இன்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்களின் முன்னிருந்து ஓதுவதாக ஓதியதில் ஒரு ஜுஸு (குர்ஆன் ஷரீபின் முப்பதில் ஒரு பாகம்) ஓத முடிந்தது" என்று ரைத்தார். உஸ்தாது நீர் செய்வது மிக்க உத்தமமானது. ஆனால் இன்று "நீர் இணையற்ற அல்லாஹுத ஆலாவின் பரிசுத்த சமுகம் நின்று ஓதுவதாக பெண்ணிக் கொண்டு ஓதவேண்டும்" எனக் கூறினார்.

மறுநாட் காலையில் புகழத்தக்க ஹாபிஸ் வரக்காணவில்லை. சிறப்புவாய்ந்த உஸ்தாது மிக ஆயாசப்பட்டார். ஹாய்! என் உயர்ப்பதவியையுடைய மாணவரே! என்றும்போல் இன்று இந்நேர மாகியும் நுன் திவ்விய வதனத்தைக் காணேமே! உன் நிலைமை எவ் வாறுயிற்றே! என புலம்பினவராய், ஹாபிஸ் சாஹிபின் இல்லத்தை யடைந்தார். மாணவரோ வியாதியில் சிக்குண்டவராய் மரணத்தரு வாயில் இருந்தார். அவர் தன் குருவைநோக்கி, என் அன்புமிக்க உஸ்தாது அவர்களே! தங்களுத்திரவுபோல் இன்று அல்லாஹுத் ஆலாவுக்கு முன் நின்று குர்ஆன்ஷரீபை ஓதுவதாக எண்ணி யோதி னேன். "அல்ஹம்து" என்று ஆரம்பித்து, "இய்யாக நஃபுது, வஇய்யாக நஸ்தயீன்" என்பதற்கு அப்புறம் என்னால் ஓதக்கூட

சத்திலுதித்தவர்கள் ஏழைகளாகவும் ஜீவனஞ்செய்து வருகின்றதை புதினப்பத்திரிகை வாசிப்போர் அறிந்திருக்கலாம்) நாடியவரை கண்ணியப்படுத்தவும்,இழிவுபடுத்தவும்செய்பவன்.அதிபெருந்தீதவானும், பொருமையும்,சகிப்பு முடையவன்; தனக்குச்செய்யும் தொண்டையும், வணக்கத்தையும் மேன்மைப்படுத்துபவன். துஆவை யேற்பவன்.யாவற்றிற்கும்அதிபன்; அவன்பேரில் எவனுடைய அதிகாரமுமில்லை.அவனுடைய காரியங்கள் இராஜ தந்திரமுடையவைகள். கியாமத்தில் பின்பு உயிராக்குகிறவன் அவனே. உயிருடனிருக்கவும், இறக்கவும் செய்பவன். அவனுடைய ஸிபாத்துகளைக் கொண்டு அவனை யறியக்கூடும். அவனுடைய தாத்தை யறியமுடியாது. தண்டனைக்கு தகுதியான

வில்லை. ஏனெனில், அவ்வாயத்தின் பொருளாவது :—உன்னையே வணங்குகிறோம். இன்னும், உன்னிடமே உதவித்தேடுகிறோம்'' என்றிருக்கிறது போல் "நாம் நடக்காமல் அவனுக்குமுன் பொய் சொல்லுகிறோமே என எனக்கு வெட்கமுண்டாகி, முதலில் அவ்வாயத்தின்படி நடந்து மெய்ப்பிக்கவேண்டுமென்ற'' எண்ணம் என்ஹிருதயத்தில் உண்டாகிவிட்டது என்று மொழிந்தார். உடனே அவரின் ரூஹ்—ஆத்மா பரிசுத்த அல்லாஹுத ஆலாவின் சந்நிதானம் சென்றுவிட்டது. அந்த ஹாபிஸின் மொழியைக் கேட்டுக்கொண்டும், அவரின் நிலைமையை நோட்டமிட்டுக் கொண்டுமிருந்த அவரின் உஸ்தாதும், ஓர் சத்தமிட்டவராய் தன் ஆத்மாவையும் அல்லாஹுவின் சமுகம் அனுப்பினார்.இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜி ஊன்.

அருமை வாய்ந்த "அல்கலாம்'' மாணவர்களே! நா ஜடலவுறுப்புகளின் வக்கீலாகும். அது "ஓ ஆண்டவனே ! நாங்கள் எல்லோரும் அஃதாவது:— ஹிருதயம், மூளை, ஈரக்குலை, கை கால், இறச்சி, எலும்பு ஆகியவைகள் யாவும், உன்னையே வணங்குகிறோம் ; இன்னம் உன்னிடமே உதவி தேடுகிறோம்'' என்று மொழிகிறது.

இபாதத்து என்பதற்கு "மனிதனுடைய எல்லா உறுப்புகளும் அல்லாஹுவினிடம் ஆஜராகுவது'' என பொருள் படும். ஆகையால் தான், துய்ய ஹிருதயத்தையுடைய அச்சிறு ஹாபிஸுக்கு அந்தஆயத்திற்குமேல் ஓதக்கூடவில்லை. ஏனெனில், அவர் ஓதும் ஆயத்துப்படி நடக்கவில்லை என்பதே. ஓர் பரிசுத்தன் அல்லாஹ்வுக்குமுன் பொய் மொழிந்து கொண்டே மேல் ஓதுவதற்கு எவ்விதம் சக்தி பெறுவர் ! ஆகவே, அவர் இரவு முழுதும் அழுது அழுது ஓதினார். இறுதியாக சகிக்க முடியாத நிலைமையில் வந்தபோழ்து, உலகில் ஜீவிப்பது பிரியமற்று போய், தன் உண்மை எஜமானனை யடைந்தார்,

பாவத்தை யுடையோனுக்குத் தண்டனையைக் கொடுப்பான். நேர்வழியைக் காட்டுகிறவன் அவனே. உலகில் உண்டாகும் எல்லா நடவடிக்கைகளும் அவனுடைய உத்திரவின்படியே ஏற்படுகிறது. அதையெவனும் பிற்படுத்த முடியா. அவன் உறங்குகிறவனல்லன். தூங்குகிறவனுமல்ல. உலகத்தை பாதுகாக்கிறவன். அதில் கொஞ்சமும் சடைவு யடைகிறவனல்லன். அவன் எல்லா பூர்ணமான ஸிபத்துகளை யுடையவன். (தொடரும்)

இப்பொழுது நாம் ஆலோசிக்கவேண்டும். நம் ஜடலவுறுப்புகள் அல்லாஹுத ஆலாவிடத்தில் முன்னெக்காதிருக்கும் நிலைமையில், நாம் தினசரிகுறைந்த பக்ஷம் 40-50 முறைகள் அவ்வாய்த்தை யோதுகிறோம். நம் நாவன்றி வேறு எவ்வுறுப்பும் அவ்வாயத்தின் படி நடப்பதில்லை. அல்லாஹுத ஆலா நம் யாபேர்களுக்கும் அம்மாணவரைப்போல் நன்கறிந்து, அவனுக்குமுன் பொய் மொழியாதிருக்கவும், பயபக்தியோடு அவனுக்குத் தொழுகும் படியும் ஹிதாயத்து செய்தருள் புரிவானாகவும். ஆமீன்.

பத்திராதிபர் குறிப்பு.

வர்த்தமான் சஞ்சிகையின் தீர்ப்பு.

இந்திய பாதுகாப்பு சட்டத்தின் 153-வது A பிரிவு ஜஸ்டிஸ் கண்வர்தாலீப் சிங்கினால் மரணமடைந்து, பிரேதக்குழியில் போடுவதற்கான கிரிகைகள் நடந்துவரும் சமயத்தில், பஞ்சாப் ஹைகோர்ட்டின் ஆக்டிங் சீப்ஜட்ஜிகளான இரு ஐரோப்பிய ஜட்ஜிகள் அப்பிரிவுக்கு உயிர்க்கொடுத்து ஜீவிக்கச் செய்துவிட்டனர். புத்துயிர் பெற்ற அச்சட்டத்தின் கீழ் "வர்த்தமான்" என்ற பத்திரிகையில் இஸ்லாம் மார்க்க ஸ்தாபகர் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கேவலப் படுத்தக்கூடிய "நரக யாத்திரை" என்ற வியாசத்தின் பேரில் நடந்துவந்த கேஸை விசாரித்துத் தீர்ப்பளித்தபோழ்து, மொழிந்ததாவது:—அவ்வியாசம் நாயகம் அவர்களை சொந்த ஹோதாவில் தாக்கி எழுதப்படவில்லை. ஆனால், அவர் இஸ்லாம் மார்க்க ஸ்தாபகர் என்ற ஹோதாவில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் அது இ. பி. கோ. 152-வது A பிரிவுபடி குற்றம் சாட்டக்கூடி

யதே. ஆகவே, அவ்வியாச கர்த்தாவான தேவி ஷரன் ஷர்மாவுக்கு ஒருவருட கடுங்காவலும், 500 ரூபாய் அபராதமும், வர்த்தமான பத்திராதிபர் கியான்சந்துக்கு ஆறுமாத கடுந்தண்டனையும், 250 ரூபாய் அபராதமும் விதிக்கிறதாகக் கூறியிருக்கிறார்கள். நரக யாத்திரை என்ற வியாசக்கர்த்தாவும், அதைப் பிரசுரித் தோரும் தங்கள் துர்க் கிருத்தியத்திற்கு தக்க தண்டனையை யடைந்தனர்.

ஓர் ஹிந்து பத்திரிகையின் உண்மை மொழி.

லாஹூரில் வெளியாகும் "சுயராஜியா" வென்ற வாரப்பத்திரிகை காங்கிரஸ் பத்திரிகையாக விருப்பதோடும், சுத்தி, சங்கடன் இயக்கங்களுக்கு உதவிபுரிந்து, ஹிந்துக்களை முஸ்லிம்களுக்கு விரோதமாய் கிளப்பி விட்டுக்கொண்டிருந்தது. அப்பத்திரிகை தன் ஆகஸ்டு மாதம் 8உ வெளியீட்டில் "இராஜாங்க ஊழியமும், ஹிந்துக்களும்" என்ற தலைப்பின் கீழ் இந்து மஹா சபையைப்பற்றி எழுதியிருப்பதாவது:— சென்ற நடவடிக்கைகளை ஆதரித்திருந்த தன்பின்பு நாம் கீழ்காணும் அபிப்பிராயத்தைக் கொள்கிறோம். அஃதாவது:—"ஹிந்துக்கள் சமூக சீர்திருத்தம் முதலிய காரியங்களில் எவ்வளவுக்கெவ்வளது பிரசாரஞ் செய்தனரோ, அவ்வளவுக்கவ்வளவு தேசத்தில்கொடிய குழப்பங்கள் உண்டாகி, பூர்ணமற்றதாகிவிட்டது. ஆனால்,ஹிந்து சங்கடன் ஆரம்பமானதன் பின்பு, முஸ்லிம்கள் ஹிந்துக்களை முஸ்லிம்களாக்குவதை தங்களின் தினசரி வாழ்க்கையின் கடமையாக ஆக்கிக்கொண்டனர்" என்று எழுதியிருக்கிறது.

ஹிந்து மஹாசபையின் நடவடிக்கையின்பேரில் சுயராஜியா குற்றம் சாட்டுகிறது. அதனால், ஹிந்துக்களுக்கு பியயோசனமுமில்லை. அதை நிவர்த்திப்பதற்கான உண்மையும் அறியக்கூடவில்லை. ஆனால், மாற்றமாக அதுவும் ஏழை, பாமரர் ஆகியவர்களைக் கிளப்பி விடுகிறது. பண்டிட் ஜீ தனியாகவிருக்கிறார். பின்னும், இதைக் காட்டிலும் அதி கொடுமையான கிளர்ச்சிச் செய்கின்றனர். அப்பத்திரிகை பின்சென்று எழுதுவதாவது:—இக்கிளர்ச்சியில் எல்லா ஹிந்துக்களும் சேர்ந்திருந்தும் கோரிய நாட்டத்தை ஏன் அடையக் கூடவில்லை? என்ற கேள்வியுண்டாகிறது. அதற்கு நம்முடைய அபிப்பிராயப்படி முதற்காரணமாகிறது: "மாளவியா ஜீ, லாலா லஜ்பதிராய் போன்ற பெரிய தலைவர்கள் இக்கிளர்ச்சியில் பிரசங்கம் செய்வதைத் தவிர, எப்பொழுதும் நடவடிக்கையில் போதிய ஊக்கமெடுத்துக் கொள்ளவில்லை. ஹிந்துக்களுக்குமுன் யாதொரு வேலைத் திட்டத்தையும் கொண்டுவருவதில்லை. இவ்விதம் பராமுகமாக விருப்பதால் ஹிந்துக்களில் முஸ்லிம்களுக்கு விரோதமான மனக்கொதிப் புண்டாகிவிட்டது. அதனால், காரியம் நடைபெறவில்லை" என்பதே. சுயராஜியாவே இறுதியில் "சங்கடனே முஸ்லிம்களுக்கு விரோதமாய் ஹிந்துக்களுக்கு மனக்கொதிப்பை யுண்டுபண்ணியது" என கூறிவிட்டது. ஆனால், இக்கொதிப்பினால் மாளவியா, லஜ்பதி, பரமானந்து போன்றோர் உண்மையான வேலைசெய்யவில்லை. ஆயினும் இக்கிளர்ச்சியை யுண்டுபண்ணி, இந்துக்களையே முகங்குப்புற விழச்செய்துவிட்டனர். ஹிந்துக்கள் சுயராஜியாவின் உண்மையும்,

நியாயமுமான இந்தஅபிப்பிராயத்தைக் கவனித்து, மாளவியா பேர்வழி ரேரின் சூழ்ச்சியினின்றும் விலகிக்கொள்ள முயற்சிப்பார்களா?

ஹிந்து மஹா சபா காரியக் கமிட்டியின் தீர்மானம்.

ஹிந்து மஹாசபா காரியக்கமிட்டி ஆகஸ்ட் மாதம் முதற் தேதியில் கூடவிருந்தது. ஆனால், வர்த்தமான் கேசின் முடிவைத் தெரிந்த பின் ஆகஸ்டு மாதம் 8௳ காசியில் கூடியது. பண்டிட் மாளவியா ஜீயின் ஆராய்ச்சியுடைய கண் பார்த்துக் கொண்டதன்பேரில், ஓர் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசியதாவது:—ஜஸ்டிஸ் கண்வர் தாலீப் சிங்கு ஒரு ராஜ்பாலை விடுவித்து, இ. பி. கோ. 153-வது A. பிரிவுபடி பலரைக் கைதியாகும்படி செய்துவிட்டார். பல சமாஜ பிரசாரகர்கள் சிறைக்கூடம் போகும்படி யேற்பட்டுவிட்டது. ஆகையால், மார்க்கத்தலைவர்கள், நபிமார்கள், வலிமார்கள்ஆகியோர்களைத் தாக்கி எழுதும் ஹிந்துக்கள் பேரிலும், ராஜ்பால் பேரிலும் ஹிந்து மஹாசபா அதியுண்மை ஹிருதயத்தோடு தன்வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது." என தீர்மானித்திருக்கின்றனர். இது எவ்விஷயத்தை யொட்டியாகினும் சரி, ஹிந்து மஹாசபா கூட்டங்களில் இப்படிப்பட்ட புத்தி சாதுரியமான தீர்மானம் ஏற்பட்டது இதுவே முதற்கூட்டமாகும். ஹிந்துக்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் நற்குணமின்மையை ஹிந்து சங்கத்தன் சீர்படுத்த முயன்றிருந்தால், இன்றைக்கு ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையே உண்டாயிருக்கும் வேற்றுமையும், கஷ்டநஷ்டங்களும் ஏற்பட்டிருக்காதென்பது மிகையாகாது. ஆகவே, மாளவியா ஜீ மேற்கூறியபடி நற்குணத்தை விர்த்திசெய்து கொள்ளும்படி ஆலோசனைக் கூறுகிறோம்.

இஸ்லாமும், அதன் ஸ்தாபகரரும் தாக்கப்படுவதேன்?

முஸ்லிம்கள் பத்து நூற்றூண்டுகளுக்கு முன்னிருந்து இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் இன்றைய எண்ணிக்கையில் பதினூறில், அல்லது முப்பத்திரண்டு பாகத்தில் ஓர் பாகமுடையவர்களாக விருந்த காலத்திலும் 45 கோடி முஸ்லிம்கள் தங்களின் நேர்வழிகாட்டியென யொப்புக்கொண்டு, கண்ணியப்படுத்தும் நபிகள் பிரான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப்பற்றி துற்சொல் கோர்த்த நூலை எழுத முஸ்லிமல்லாத எவனுடைய ஹிருதயமும், எழுதுகோலும், அதுமட்டுமல்ல ஹிருதயமும் உசும்புவதற்கு சக்தி பெற்றிருக்கவில்லை. ஆனால், இன்று அவர்களோ, எட்டுகோடியாக பெருகியிருக்கும் இந்த நாளில் நிலையான சரித்திரம், நாகரிகம், உலகவாழ்க்கை முறை ஆகியவைகளற்ற நிலைமையில், மதவைராக்கியத்தின்பேரில் முஸ்லிம்கள் ஹிருதயம் புண்படும் படியான "சத்தியார்த்த பிரகாசத்தை" தயானந்தரும், அதன் மொழிபெயர்ப்பை ஜம்பு நாதனும், "ரங்கிலா ரஸுலை" ராஜ்பாலும், "நரகயாத்திரை" என்ற வியாசத்தை தேவி ஷரன்ஷர்மா ஆகியோர்களின் கையும், எழுதுகோலும் எழுதத்துணிந்து, இஸ்லாமிய உலகை ஈரலைக்கிழிக்க சக்திபெற்றதன் காரணம் யாது? இக்கால முஸ்லிம்

கள் அந்த நாள் முஸ்லிம்களைப் போன்றோர்களல்ல. நோய், பலஹீனம், தாள்த்தப்பட்டிருப்பது, சமூகவேற்றுமை ஆகியவைகளில் இந்த நாள் முஸ்லிம்கள் சிக்குண்டிருப்பது தான் காரணமாகும்.

* * * *

முஸ்லிம்கள் மௌத்தைப் பயப்படவாரம்பித்தனர். அவர்களின் உயிரைக் கருப்பிட்டியாக வெண்ணினர். அவர்கள் நிலைமையோ, கெடுதியில் சிக்குண்டுவிட்டது. அவர்களின் மரணம் அதிகியாதி வாய்ந்ததாக இருக்கவேண்டிய நிலைமையில், நோயில் சிக்குண்டு பாயும் படுக்கையுமாகவும், குதிகாலை உறைந்தவர்களாயும், வாயைப் பிளந்தவர்களாயும் மரணமடைய வாரம்பித்தனர். இவ்விதம் மரணிப்பதை முற்கால உண்மை முஸ்லிம்கள் அதிகேவலமாக வெண்ணி, வெறுத்தனர். அவர்கள் முஜாஹிதுடைய மரணத்தை யதி நட்புக்கொண்டனர். உதாரணமாக:—ஹஜ்ரத் ஷைகுல் ஹிந்து மௌலானா மஹ்மூதுல் ஹஸன் மர்ஹூம், வ மக்பூர் அவர்கள் மரணநோய் பீடித்திருந்தபோழ்து, 1920-ம் வருடம் டில்லியில் கூடிய ஜமீயத்துல் உலமா மகா நாட்டிற்கு தலைமைவகித்து நடத்தினார்கள். (மகா நாடும் முடிந்தது, அவர்களும் மரணமடைந்தார்கள்). அச்சமயம் அவர்களுடைய நிலைமையை நோட்டமிட்டோர்கள் கண்ணீர் சொரிந்தனர். ஹஜ்ரத் அவர்களைப் பார்த்து மொழிந்ததாவது:—ஓ சகோதரர்களே! எனக்காக நீங்கள் ஏன் கண்ணீர் வடிக்கின்றீர்கள்? நானோ வயது முதிர்ந்தவன். இப்போது நான் மரணமடைய வேண்டியதைத்தவிர வேறெதுவும் பாக்கியாக விருக்கவில்லை. ஆனால், மைதானில் ஷஹீதாகி, என் சரீரம் தலைவேறு, கை கால் வேறு, உடல் வேறாகி, கபரற்று, காக்கை, கழுகுகளுக்கு இரையாகிவிடவேண்டிய நிலைமையில், கட்டிலில் படுத்தவனாக உயிர் துறந்து கொண்டிருப்பதன் பேரில் கை சேதப்படவேண்டியதுதான்; கண்ணீர் வடிக்கவேண்டியதுதான்'' என மொழிந்திருக்கிறார்கள். ஆஹ்! இஸ்லாமுடைய புத்துயிரளிக்கும் படிப்பின்படி நடந்த முஸ்லிம்களின் நடவடிக்கை எவ்வளவு உயர்ப்பதவி யுடையதாக விருக்கிறது! அப்படிப்பட்ட உணர்ச்சியை இன்று முஸ்லிம்கள் கையிழந்து விட்டனர்.

* * * *

ஏகனைத் தவிர மிருகத்தைப் பயப்படுவது இஸ்லாமில் பாவத்திலும் மிகக் கொடியது. முன் வைத்தக்காலை பின்வாங்குவதும் இஸ்லாமில் விலக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாம்மீதும், இஸ்லாம் மதஸ்தாபகர் மீதும் தாக்கபடுமாயின், யுத்தத்தை விட்டும் விரண்டோடுவது ஹராமென வெண்ணப்படுகிறது. இஸ்லாம்பேரில் முதலில் தாக்குகின்றவர்கள் காபிரீன்கள். பின்பு முதலில் விரண்டோடுவதும் காபிரீன்கள் என்பது எத்தனையோ முறைகளில் நடந்திருப்பதை சரித்திரங்களில் காணலாம். இஸ்லாம் மார்க்கம் கற்பிப்பதும் அவ்விதமே. அஃதாவது:—முதலில் காபிரீன்கள் இஸ்லாம்மீது தாக்கும்படி விட்டுவிடுங்கள். (தாக்கிய) பின்பு அதைத் தடுக்கும்பொருட்டு நீங்களும் எதிர்ப்பு செய்யுங்கள். பின்பு முதுகைக் காட்டுவது ஹராம் என்பதை நன்கறிந்து கொள்ளுங்கள்'' என்பதே. ஆகையால், இஸ்லாம் மீதும், நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களையும் தாக்கி, யிழித்துக் கூறுவதைத் தடுப்பதற்கும், அல்

லாஹுத ஆலாவுடைய திருநாமத்தையும், அவனுடைய உண்மை கலிமாவையும் நிலை நிறுத்தும்பொருட்டும், நம்மிடையேயுள்ள வேற்றுமைகளை யொழித்து, ஒற்றுமையாக முஸ்லிம்கள் வேலை செய்ய முற்படுவார்களா? எல்லாம்வல்ல அல்லாஹுத ஆலா நம் முஸ்லிம் சகோதரர்களுக்கு அத்தன்மையைக் கொடுதருள் புரிவாணுக! ஆமீன்.

உலகப் போக்கு.

உலகத்தின் பாஷைகள் :—உலகத்தின் எல்லா பாஷைகளின் கடசி சங்கியப்படி, இன்று உலகமடங்கலிலும் 2896 பாஷைகள் உயிராகவிருக்கின்றன. ஐரோப்பாவில் 48, ஆப்ரிக்காவில் 118, ஓஷினுவில் 117, ஏஷியாவில் 153, வட, தென் அமெரிக்காவில் 424 ஆக அவைகளில் 860 பாஷைகள் குறிப்பிடத் தகுந்தவைகளாகும்.

அரேபிய டாக்டர்கள் :—இந்த நாள் கீழ்நாட்டில் ஐரோப்பிய டாக்டர்களை நோய்தீர்க்கும் பொருட்டு அதிவிசேஷத்துடன் அழைக்கப்படுவதைப்போல், முற்காலத்து அரேபிய டாக்டர்களை ஐரோப்பிய இராஜாக்கள் அழைத்திருப்பதாக சரித்திரம் கூறுகின்றது.

எமனில் மார்க்க சட்டம் :—ஜினு செய்பவர்கட்கும், கள்ளு, சாராயம் குடிப்பவர்கட்கும், மற்றும் இதர குற்றவாளிகட்கும் மார்க்க முறைப்படி தண்டனை செய்யப்பட்டு வருவதாக எமனில் வெளிவரும் 'ஐமான்' பத்திரிகை கூறுகிறது.

பிரஞ்சுக்காரர்கட்கு ஏராளமான நஷ்டம் :—பிரஞ்சு பிரதம மந்திரி மோசியூ மோஜீன் ஒரு பிரசங்கத்தில் பின்வருமாறு கூறினர்.

மொரோக்கோவில் அமீர் அப்துல் கரீமுக்கு விரோதமாக ரீப் சைனியங்களுடன் பிரான்சு சண்டை நடந்தது. அதில் பிரான்சுக்காரர்கட்கு பதினேறு கோடியே அறுபத்தேழு லட்சம் பிரான்கு நாணயஞ் செலவானது மன்னியில், நாற்பதாயிரம் பௌஜுகள் யுத்தம்செய்ததில் 1926-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13-ந்தேதி முதல் 1926-ம் வருஷம் ஜுலை மாதம் 24-ந் தேதிக்குள் ஆறுயிரம் சைனியங்கள் கொல்லப்பட்டு போயினவென்பதே. காஹிராவில் வெளிவரும் "அஸ்ஸியாஸத்" பத்திரிகை கூறுகின்றது.

ரீபில் ஸ்பானியர்களின் அட்டூழியம் :—மேடர்டுவிலிருந்து வந்த சங்கதியொன்று கூறுவதாவது :—ஸ்பானிய படைகள் மீண்டும் ரீபிலும், அதை அடுத்த ஊர்களிலும் கொள்ளையடித்தும், நாசப்படுத்தியும் ஆயுதங்களில்லாத ஏராளமான ரீப்வாசிகளைக் கைதுசெய்து கொண்டு போய்விட்டனர்.

சென்னை நீல் சிலையை உடைத்த ஸ்ரீமான் சுப்பாராயலு, ஜனுப் முஹம்மது சாலிஹ் ஆகிய இருவருக்கும் தனித்தனி 3-மாத கடுங்

காவல் தண்டனையும் 300-ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கொடுக்கத் தவறினால், பின்னும் மூன்று மாத கடுங்காவல் தண்டனை அனுபவிக்கவேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டனர்.

இராஜகுமரி :—ஒரு சமயம் இங்கிலாந்தில் சிறுவயதையுடைய இராஜகுமரி தன் தாயாருடன் பெரிய ஆடம்பரத்தோடு, லண்டன்மா நகரத்தின் ஓர் சடக்கில்சென்று கொண்டிருந்தனர். அது போழ்து வேலையில்லா தொழிலாளிகள் பஞ்சத்தால் மிக வருந்தினவர்களாய், கூட்டமாக இரைச்சல் செய்துகொண்டிருந்தனர். அதைக்கண்ட இராஜகுமரி தாயை நோக்கி, இவர்கள் ஏன் கூச்சலிடுகின்றனர்? என கேட்டதற்கு, தாய் மொழிந்ததாவது:—இவர்கள் தொழிலாளிகள்; ரொட்டியகப்படாமல் கஷ்டப்படுகின்றனர் என்றார். அதற்கு இராஜ குமரி மிக ஆச்சரியப்பட்டவளாய் அவர்களுக்கு ரொட்டிகிடைக்கா விட்டால், கேக் வாங்கிக் கொள்ளுகிறது தானே ! என்று மொழிந் தாராம்.

எட்வர்ட் சக்கரவர்த்தி இளவரசராக விருந்த போழ்து, ஒரு சமயம் தம் தாயார் விக்டோரியா மஹாராணியார் அவர்களுக்கு "5 பவுன் செலவுக்கு அனுப்பும்படி கடிதம் எழுதினார்." அதற்கு மஹா ராணியாரவர்கள் இள வரசருக்கு ஒரு நீண்ட கடிதத்தில் "சிக்கன மாய் செலவுசெய்யும்படி எழுதினார்கள்". ஒருவாரம் கழித்து தாயார் அவர்களுக்கு ஒரு நன்றி செலுத்தும் கடிதம் எட்வர்டவர்கள் எழுதி னார். அதில் அவர் "தாங்கள் அனுப்பிய லெட்டர்கிடைத்தது. எனக்கு இப்போழ்து 5 பவுன் தேள்வை நீங்கிவிட்டது. இன்னம் தங்களுக்கு நன்றியும் செலுத்தவேண்டியவனாக விருக்கிறேன். ஏனெனில், தாங் கள் எழுதிய கடிதத்தை 20-பவுனுக்கு விற்று விட்டேன்" என்று எழுதினார்கள்.

இராக்கில் பீதி :—எகிப்தில் ஒரு பக்கத்தில் இங்கிலீஷ்காரர்க ளின் சண்டையும், மற்றொரு பக்கத்தில் இராக் பார்லிமெண்டு சச் சரவும் ஏற்பட்டதன் பயனாக, இராக்கில் பெரும் பீதி ஏற்பட்டிருக்கி றது என்று 'கௌக்க புஷ்ஷக்கு' பத்திரிகை கூறுகின்றது.

மேல்நாட்டாரின் கல்விப்பிரியம்:—பிர்த்தானியாவில் தற்காலம் 600 வாசகசாலைகளிருக்கின்றன. அவைகளில் ஒரு கோடியே நாற் பது லக்ஷம் புத்தகங்களிருக்கின்றன. அவைகளில் வருடத்தில் ஏழு கோடி ஜனங்கள் வாசிக்கின்றனர். வருடத்தில் 30-லக்ஷம் பேர்கள் அவ்விடத்திலிருந்து புத்தகங்களை தங்கள் வீட்டிற்குக் கொண்டு போய் வாசிக்கின்றனர். இதைக் கொண்டு நாகரிக தேசத்தில் கல்விப் பிரியம் இவ்வளவு இருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

ஜெர்மனி போலீஸ் காரர்களுக்ககாக ஒருவித கடிகாரம் தயாரித் திருக்கின்றனர். அதைக் கைகெடியாரத்தைப்போல் கட்டிக்கொண் டால், அதை யணிந்திருப்பவனைப் பின்னிருந்து யாராவது தாக்கி னால், அக்கடிகாரத்தினால் தாக்கியவன் கீழ் வீழ்ந்து, ஒரு நிமிடம் பிரக்ஞையற்றுப் போகிறானாம்.